Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 20, 2022

சனிக்கிழமை, 20 ஒகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 080 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# முட்டை விலை குறைகிறது



கோழி முட்டையின் விலை 5 ரூபாவினால் எதிர்வரும் திங்கட்கிழமை (22) முதல் குறைக்கப்படும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# மைத்திரியிடம் வாக்குமூலம்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பதவிக்காலத்தில் பொதுமன்னிப்பு வழங்கிய சம்பவங்களில் ஒரு சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் 5 மணிநேரம் நேற்று (19) வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## சர்வதேச முதலீடுகளை கொண்டுவர

# தேசிய பாதுகாப்பு அவசியம்

**காட்டு சட்டத்தினால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது**

**தேசிய பாதுகாப்பு நாட்டின் முதுகெலும்பாக இருக்க வேண்டும்**



*மஹேஸ்வரி விஜயனந்தன்*

நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக கட்டமைப்பிற்கும் தேசிய பாதுகாப்பே பிரதானமானது. தேசிய பாதுகாப்பு இல்லாத எந்தவொரு நாட்டிலும் முதலீடுகளை செய்ய எந்தவொரு முதலீட்டாளரும் முன்வர மாட்டார்கள் என பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சில தினங்களில் விலைகள் குறையும்



அடுத்த ஒரு சில தினங்களில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களில் சில்லறை விலையில் மாற்றங்கள் ஏற்படும் எனவும், பல பொருட்களின் விலைகள் குறையும் எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கடந்த சில மாதங்களாக நாட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய அதிக சிரமங்கள் ஏற்பட்ட காரணத்தினால்,

தொடர்ச்சி P2

## பயங்கரவாத தடை சட்டத்தை

# கையில் எடுக்க வேண்டாம்

**சர்வதேச மன்னிப்புச் சபை அரசுக்கு வலியுறுத்து**

AMNESTY INTERNATIONAL

அரசாங்கத்துக்கு எதிராக போராடும் ஆர்ப்பாட்டக்காரர்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த பயங்கரவாத தடை சட்டத்தை கையில் எடுப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் எனவும், பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# அபாயா அணிந்து காதலியை கண்காணித்தவர் கைது



முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயாவை அணிந்துகொண்டு, அங்கும் இங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்த முஸ்லிம் இளைஞன், கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி ரயில் நிலையத்தில் இவ்வாறு அலைந்து கொண்டிருந்த போது, அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் பிடித்து, காலி பொலிஸாரிடம் அவ்விளைஞன் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காலி மக்ளுவவை வசிப்பிடமாகக் கொண்ட 27 வயதான முஸ்லிம் இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ரயில் நிலையத்துக்கு நேற்று (19) காலை வந்திருந்த அவ்விளைஞன், கொழும்புக்குச் செல்வதற்காக ரயில் பயணச்சீட்டை பெற்றுள்ளார். அவரது குரல் தொடர்பில் சந்தேகம் அடைந்த பாதுகாப்பு அதிகாரிகள், ரயில் வரும் வரையிலும் அவரை பின்தொடர்ந்து கண்காணித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## அவுஸ்திரேலியா

# 25 மில்.டொலர் உதவி

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளில், இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக இலங்கைக்கு இந்த உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த மனிதாபிமான நிதியுதவி மூலம் இந்நாட்டு மக்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் இந்த மனிதாபிமான உதவியின் மூலம் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இலங்கைக்கு அவுஸ்திரேலியா வழங்கும் உதவித் தொகை 75 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தடை நீக்கப்பட்ட அமைப்புகளே குற்றச்சாட்டை முன்வைத்தன

*மஹேஸ்வரி விஜயனந்தன்*

இன்று தடை நீக்கப்பட்டுள்ள புலம்பெயர் அமைப்புகள் தான் இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றச்சாட்டில் ஈடுபட்டதாக ஜெனிவாவில் பிரேரணையை நிறைவேற்றினர். அவர்கள் மீதான தடை நீக்கப்பட காரணம் என்னவென தெரியவில்லை என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு, சட்டம் தொடர்பில் ஊடக அறிக்கையிடல் தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுனாமியின் போது முப்படையினரும் பொலிஸாரும் சிறப்பாக செயற்பட்டனர். இந்த விடயத்தில் முப்படையினரின் மனிதாபிமான நடவடிக்கை குறித்து ஜெனீவாவில் பேசப்படவில்லை. கொரோனா தொற்றின் போதும் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களில் இராணுவத்தினரின் சிறப்பாக செயற்பட்டனர்.



தொடர்ச்சி P2

## மத்தள விமான நிலையத்தின்

# ஒரு பங்கு விற்கப்படும்

**விமான நிலையம் 100 மில்லியன் டொலர் நட்டத்தில்**




மத்தள விமான நிலையத்திற்கு முறையாக விமானங்கள் வருகை தராத காரணத்தினால் இப்போதும் விமான நிலையம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. எனவே விமான நிலைய காரியாலயத்தின் ஒரு பங்கினை விற்கவேண்டும் என கப்பல்துறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# இலஞ்ச, ஊழல் தடுப்பு புதிய சட்டமொன்று வரும்

இலஞ்ச, ஊழல் தடுப்பு சட்டத்தை நிறைவேற்றுவது குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும், கூடிய விரைவில் இலஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு புதிய சட்ட திருத்தமொன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்து அதற்கான அமைச்சரவை அனுமதியை தான் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜப்பான் தலையிட வேண்டும்

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகளுக்கு உதவுமாறும், இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட இலங்கைக்கு கடன் வழங்கும் இந்து சமுத்திரத்தின் கடன் வழங்கும் நாடுகளை கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுவார்த்தைக்கு அழைக்குமாறும் ஜப்பானிடம் கேட்டுக்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்த யாராவது ஒருவரது தலையீடு இருக்க வேண்டும், அதற்காக இந்த செயற்பாடுகளில் தலையிடுமாறு ஜப்பானை கேட்டுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ரொய்ட்டர் செய்திச்சேவைக்கு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மக்கள் உணரக்கூடிய நல்லிணக்கமே அவசியம்



போரினாலும், பொருளாதார ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உணரக்கூடிய வகையில், நம்பகத்தன்மையுடைய நல்லிணக்க வேலைத்திட்டங்களே வடக்கிற்கு அவசியம் என யாழ், சிவில் பிரதிநிதிகள் ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்-காரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்-கார் நேற்று (19) யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். யாழ் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர், அரசாங்க அதிபர் மற்றும் ஆளுநர் ஆகியோருடனும் கலந்துடையாடியிருந்தார். இதன்போது, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள வடக்கு மக்களின் வாழ்வாதார நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## பொதுமக்களுக்கு எதிரான அடக்குமுறையை

# அளவுக்கு அதிகமாக கையாள்கின்றனர்

**ஜூலியிடம் எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டு**

நெருக்கடி நிலைமைகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொதுவான வேலைத்திட்டங்களில் தாம் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவோம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். அனாவசியமான கைதுகள், தாக்குதல்கள் மற்றும் அடக்குமுறைகளை இந்த அரசாங்கமும் அளவுக்கு அதிகமாக கையாள்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று (19) சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்தும், அரசியல் நிலைமைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் குறித்தும் இதன்போது பேசப்பட்டிருந்தது. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும்,

தொடர்ச்சி P2

# 16 பேருக்கு பிணை

கொழும்பில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின்16 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கைதான 19 பேர் நேற்று (19) கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அதன்போது, 16 பேருக்கு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

# சட்ட நடவடிக்கை இன்றேல் போராட்டம்

**செந்தில் அதிரடி அறிவிப்பு**



தொழில் நிமித்தம் பலாங்கொடையில் இருந்து பொகவந்தலாவைக்கு செல்லும் போது இளைஞர், யுவதிகள் பெரும்பான்மையினரால் தாக்கப்பட்டதுடன், அவர்கள் தன்னை காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் அருகிலிருந்த தோட்ட குடியிருப்புகளுக்கு சென்றுள்ளனர். அச்சமயத்தில் பெரும்பான்மை இனத்தவரால் அத்தோட்ட குடியிருப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து உடனடியாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மைத்திரியிடம் வாக்குமூலம்

ரோயல் பார்க் படுகொலை தொடர்பில், குற்றவாளியாக இனங்காணப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் தண்டனை அனுபவித்து வந்த ஜூட் ஜயமஹா என்பவருக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பிலேயே மைத்திரிபால சிறிசேனவிடம், அவரது வீட்டுக்குச் சென்ற சி.ஐ.டியினர் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இராஜகிரியவில் உள்ள ரோயல் பார்க் காண்டோமினிய வளாகத்தில் இவோன் ஜோன்சன் 2005 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கினார். அத்துரலிய ரத்ன தேரரின் கோரிக்கைக்கு அமைவாகவே, பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்திருந்தார். ரோயல் பார்க் கொலைக் குற்றவாளி ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த கருத்து தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி அத்துரலிய ரத்ன தேரர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் (சிஐடி) இதற்கு முன்னர் முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அபாயா அணிந்து...

எனினும், முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடையுடன் அலைந்து திரிபவர் ஆண்ணொருவர் என்பதை பாதுகாப்பு அதிகாரிகள் இனங்கண்டு கொண்டனர். அதன்பின்னர் அவரை பிடித்து விசாரணைக்கு உட்படுத்தினர்.

தன்னுடைய காதலி இன்னுமொருவருடன் தொடர்பில் இருக்கிறார் என கேள்விப்பட்டேன். அவ்விருவரும் காலி ரயில் நிலையத்துக்கு வருகின்றனர் என்றும் தகவல் கிடைத்தது. அதன்பின்னரே, இவ்வாறு முகத்தை மறைத்துக்கொண்டு, முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயாவில் இங்கு வந்தேன் என தெரிவித்துள்ளார்.

அந்த அபாயா உடையானது, அவ்விளைஞனின் தாயுடையது என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. எனினும், அவ்விளைஞனை ரயில் பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலஞ்ச, ஊழல் தடுப்பு புதிய சட்டமொன்று வரும்

இலஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விசேட மீளாய்வுக் கூட்டம் நீதி, மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது, இலஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு புதிய சட்டத்தின் உள்ளடக்கங்கள் குறித்து இங்கு விவாதிக்கப்பட்டதுடன், சட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் அதிகாரிகளால் வலியுறுத்தப்பட்டது. இது குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும், கூடிய விரைவில் இலஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு சட்ட திருத்தமொன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்து அதற்கான அமைச்சரவை அனுமதியை தான் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது நிலுவையில் உள்ள பாரதூரமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் துரிதமாக விசாரணைகளை முன்னெடுக்க சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வுள்ளதாகவும், இடை நடுவே நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பான் தலையிட வேண்டும்

அதேபோல் அடுத்த மாதமளவில் ஜப்பானிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும், அந்த நாட்டின் பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## 16 பேருக்கு பிணை

இந்நிலையில், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 3 பேரை தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதி கோரவுள்ளதாக தெரியவந்துள்ளது.

## தேசிய பாதுகாப்பு அவசியம்

தேசிய பாதுகாப்பு, சட்டம் தொடர்பில் ஊடக அறிக்கையிடல் தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்தியடையாத நாடாக இருந்தாலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்தாலும், அல்லது அபிவிருத்தி அடைந்த நாடாக இருந்தாலும், அந்நாடு முன்னோக்கி செல்ல வேண்டும் என்றால் அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். இதில் விவாதிக்க ஒன்றுமே இல்லை. தேசிய பாதுகாப்பு இல்லாத எந்தவொரு நாடும் முன்னோக்கி செல்லாது எனக் கூறிய அவர், தேசிய பாதுகாப்பு இல்லாத எந்தவொரு நாட்டிலும் முதலீடுகளை செய்ய எந்தவொரு முதலீட்டாளரும் முன்வரவும் மாட்டார்கள் என்றார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாத ஒரு நாட்டின் மக்களின் வாழ்க்கை முறைமை முன்னோக்கி செல்லாத காரணத்தினால் அந்த நாட்டிற்கு உதவிகளையும், ஒத்துழைப்புக்களை வழங்க எந்தவொரு நாடும் அவ்வளவு இலகுவாக முன்வரப்போவதும் இல்லை. இலங்கையை பொறுத்த வரையிலும் தேசிய பாதுகாப்பு

> **அபிவிருத்தியடையாத நாடாக இருந்தாலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்தாலும், அல்லது அபிவிருத்தி அடைந்த நாடாக இருந்தாலும், அந்நாடு முன்னோக்கி செல்ல அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்**

நாட்டின் முதுகெலும்பாக இருக்க வேண்டும் எனவும் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பான நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும், இல்லையேல் நெருக்கடி நிலைமையே ஏற்படும். அதுமட்டுமல்ல காட்டு சட்டத்தினால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. வன்முறைகளை தூண்டிய, பொலிஸாரை தாக்கிய, தகாத வார்த்தைகளில் விமர்சித்து போராடிய நபர்களை கைது செய்த போது அவர்களை காப்பாற்ற சட்டத்தரணிகள் ஒரு சாரார் முன்வருகின்றனர். அதுமட்டுமல்ல நீதிமன்றத்திற்கு உள்ளே கைகளை தட்டி போராட்டக்காரர்களை ஆதரிக்கின்றனர். இவ்வாறான நிலையொன்றே உருவாகியுள்ளது. ஆனால் மறுபக்கம் தாக்கப்பட்ட பொலிஸாரின் மன நிலையை கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

## சில தினங்களில் விலைகள் குறையும்

அத்தியாவசிய பொருட்களுக்கான விலையும் அதிகரித்தது. எனினும் தற்போது அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடின்றி நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற காரணத்தினால் ஒருசில தங்களால் பொருட்களுக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எரிவாயு விநியோகம் தற்போது வழமைக்கு திரும்பியுள்ள நிலையில், அதற்கான விலை கட்டுப்பாட்டுக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், சீமெந்து, இரும்புக் கம்பிகள், வயர் போன்றவற்றின் விலைகளிலும், பிஸ்கட் உணவுகளின் விலைகளிலும் பாரிய அதிகரிப்பு காணப்படுவதால் மக்கள் தொடர்ச்சியாக முறைப்பாடுகளை செய்து வருகின்றனர். எனவே இந்த பொருட்களுக்கான

> **கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது**

விலைகளை கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நுகர்வோர் அதிகார சபைக்கு இவர்கள் வருகைதந்து தமது விலை சுட்டெண்ணை அறிவிக்க வேண்டும். இது குறித்து ஒரு சில நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

## தடை நீக்கப்பட்ட அமைப்புகளே குற்றச்சாட்டை முன்வைத்தன

இது தொடர்பில் எமது நாட்டு ஊடகங்கள் எதனையும் பேசவில்லை. இவ்வாறு இருக்கும் போது ஜெனீவாவில் உள்ளவர்களுக்கு எமது நாட்டு படையினரின் மனிதாபிமான செயற்பாடுகள் குறித்து அறிந்துகொள்ள வாய்ப்பில்லை என்றார்.

> **இராணுவத்தினருக்கு எதிராக அவர்களால் முன்வைக்கப்படும் பிரசாரங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்**

இன்று இலங்கையில் ஆறு புலம்பெயர் அமைப்புகளின் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. குறித்த அமைப்புகள் மீதான தடை ஏன் நீக்கப்பட்டதென தெரியவில்லை என்றார். குறித்த அமைப்புகளில் ஒன்றின் உறுப்பினான பாதிரியாரும் நானும் ஜெனிவா அமர்வின் போது, யுத்தக் குற்றசாட்டுகள் குறித்து நேருக்கு நேர் விவாதித்துக்கொண்டோம்.

அவர்கள் தான் இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றச்சாட்டில் ஈடுபட்டதாக ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றினர். எனவே இப்போது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்கம் ,இராணுவத்தினருக்கு எதிராக அவர்களால் முன்வைக்கப்படும் பிரசாரங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த 6 அமைப்புகளில் உள்ளவர்கள் தான் 2009 மே 19ஆம் திகதி இராணுவத்தினர் மனிதாபிமானமற்ற யுத்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக வகுப்புகளில் மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர். இராணுவத்தில் பலர் யுத்த குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டார்கள் என தெரிவித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இராணுவத்தினரின் பெயர் பட்டியலை வெளிநாடுகளுக்கு வழங்கியதே இந்த அமைப்புகளின் உறுப்பினர்கள் தான் என்றார்.

## ஒரு பங்கு விற்கப்படும்

மத்தள விமான நிலையம் இப்போதும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்தை எதிர்கொண்டுள்ள விமான நிலையமாகும். கொவிட் அச்சுறுத்தல்கள் மற்றும் ஏனைய காரணிகளை கருத்தில் கொண்டு அங்கு விமானங்கள் தரையிறக்கப்படவில்லை. எனினும் அதனையும் வருவாய் ஈட்டித்தரும் விமான நிலையமாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றோம். எனவே அங்கும் விமானங்களுக்காக பல்வேறு சலுகைகளை பெற்றுக்கொடுத்து வேலைத்திட்டமொன்றை உருவாக்கி, உலகின் சகல நாடுகளுக்கும் அந்த நாடுகளின் விமான நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும். அது வெற்றியளிக்கும் என நாமும் நம்புகின்றோம்.

நூறு மில்லியன் டொலர் கடன்களை பெற்றே இந்த விமான நிலையத்தை புனரமைத்துள்ளோம் .அந்த கடனையும் செலுத்த வேண்டியுள்ளது. ஆகவே மத்தளை விமான நிலையத்தை மீள் புனரமைக்கும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். குறிப்பாக தனியார் மயப்படுத்தப்பட்ட வேண்டும். முழுமையாக விமான நிலையத்தை விற்பதாக அர்த்தப்படாது, அதன் ஒரு பங்கினை விற்போம் என்றார்.

## மக்கள் உணரக்கூடிய நல்லிணக்கமே...

அபிவிருத்திக்கான உதவிகளுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து கலந்துரையாடப் பட்டிருந்ததுடன், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மீள்குடியேற்றம், நீதியை வலுப்படுத்துதல் மற்றும் தண்டனையின்மைக்கு எதிராகப் போராடுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் மட்டத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளையும் அவர் முன்வைத்துள்ளார்.

மேலும், யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியிருந்த அவர், வடக்கின் நிலைமைகளை கேட்டறிந்துகொண்டுள்ளனர். இதன்போது, வடக்கிலுள்ள மக்கள் உணரக்கூடிய விதத்தில் மேலும் நம்பகத்தன்மையையும், பாதிக்கப்பட்ட மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான நல்லிணக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென சிவில் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## அளவுக்கு அதிகமாக கையாள்கின்றனர்

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட ஏனைய நிதி உதவிசார் அமைப்புகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும் எதிர்க்கட்சியின் முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருப்பதாகவும், பாராளுமன்ற கட்டமைப்பின் கீழ் சகல கட்சிகளையும் ஒன்றிணைந்து, பாராளுமன்ற குழுக்களின் மூலமாக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக்களை வழங்க தாம் தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அனாவசியமான கைதுகள், தாக்குதல்கள் மற்றும் அடக்குமுறைகளை இந்த அரசாங்கமும் அளவுக்கு அதிகமாக கையாள்கின்றது. இது ஆரோக்கியமான நகர்வல்ல. எதிர்க்கட்சியாக இதனை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதும் இல்லை என்பதையும் எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல்கள், ஜனநாயகத்திற்கு எதிரான அடக்குமுறைகளை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதை வலியுறுத்தியுள்ள தூதுவர், இலங்கை மக்களின் அவசர மற்றும் நீண்ட கால தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கையின் அனைத்து துறைகளும் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்பதையும் தெரிவித்துள்ளார்.

## கையில் எடுக்க வேண்டாம்

அணைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பட்டாளர், வசந்த முதலிகே தற்போது பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் குறித்து நாம் மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும், ஆர்ப்பாட்ட செயற்பாடுகளை கட்டுப்படுத்த கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் எனவும், சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவற்கு பதிலாக பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், எதிர்ப்பாளர்களை தன்னிச்சையாக தடுத்து வைப்பது மற்றும் பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகள் போன்ற அவர்களின் நடவடிக்கைகளால் நியாயப்படுத்தப்படாத கடுமையான குற்றவியல் குற்றங்களை சுமத்துவது என்பன சர்வதேச சட்டத்திற்கு எதிரானது எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## சட்ட நடவடிக்கை இன்றேல் போராட்டம்

சந்தேக நபர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிடின் பலாங்கொடை பகுதியில் உள்ள அனைத்து தோட்டங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கடுமையான எச்சரிக்கையை செந்தில் தொண்டமான் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அம்மாவட்டத்துக்குப் பொறுப்பான இ.தொ.காவின் அரசியல் ஒருங்கிணைப்பாளர் ரூபன் பெருமாளை, சம்பவ இடத்திற்கு சென்று அம்மக்களுக்கான நீதியை பெற்றுத்தர தேவையான நடவடிக்கைகளை எடுக்க பணிப்புரை விடுத்தார்.



# பிஸ்கட் அத்தியாவசியம் தானா?





ச.சேகர்

நாட்டில் பணவீக்கம் அதிகரித்துச் செல்வதுடன், அத்தியாவசியமானது மற்றும் அத்தியாவசியமற்றது என சகல பொருட்களின் விலைகளும் கடந்த சில மாதங்களில் பெருமளவில் அதிகரித்துள்ளதை எம்மால் உணர முடிகின்றது. விலைவாசி உயர்வுக்கேற்ப மக்களின் வருமானங்கள் உயர்வடையாமை மற்றும் செலவுகளை சமாளிக்க வருமானம் போதியதாக இல்லாத நிலையில், அதிகளவு சிந்தித்து செலவிடுவது மற்றும் பொருட்கள் கொள்வனவில் ஈடுபடுவதற்கு மக்கள் தம்மை மாற்றி வருகின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதில் இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், இறக்குமதித் தீர்வை அதிகரிப்பும் தாக்கம் செலுத்துகின்றது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு நிகராக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலைகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன.

அவ்வாறு இந்தவாரம் பெரிதும் பேசப்பட்ட விடயமாக பிஸ்கட் மற்றும் இனிப்புப் பண்டங்களின் விலைகளின் அதிகரிப்பு பற்றிய விடயமாகும். குறிப்பாக இந்தப் பண்டங்களின் விலை அதிகரிப்பை கடந்த சில மாதங்களாக அவதானிக்க முடிவதுடன், அவற்றின் விலை அசாதாரணமான வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. இவை தொடர்பான பல கண்டனக் கருத்துக்கள் மற்றும் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பரவலாக காண முடிகின்றது.

பிஸ்கட் என்பது வயது வேறுபாடின்றி சகலரும் அருந்தும் ஒரு தின்பண்டமாக அமைந்துள்ளது. அதுவும் விசேடமாக தற்போது உணவுப் பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ள நிலையில், சில வீடுகளில் பிஸ்கட்களை ஒரு வேளை உணவாகக் கொண்டு வாழும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது. கிராமிய மட்டங்களில் காணப்படும் சிறுவர்களுக்கு இந்த பிஸ்கட் வகைகளே அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் உணவுப் பண்டமாக அமைந்துள்ளது. விருந்தினர்களாகச் செல்லும் போதும் நாம் பிஸ்கட் பொதிகளை அன்பளிப்பாக கொண்டு சென்று வழங்கி மகிழ்வதுண்டு.

இந்த விலை அதிகரிப்புக்கான காரணத்தை விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இந்த வாரத்தின் முற்பகுதியில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் நாட்டின் உள்நாட்டு பிஸ்கட் மற்றும் இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதுவே முதல் தடவையாக தாம் ஊடகங்களுக்கு முன்னால் ஒன்றாக பிரசன்னமாகி கருத்து வெளியிடுவதாக இந்த நிகழ்வில் பேசுகையில் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

பிஸ்கட்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் விசேட ரக கோதுமை மாவின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதுடன், அவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாமை, நிர்ணய விலையை விட அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியமை, தாவரக் கொழுப்பின் விலை அதிகரிப்பு, மரக்கறி எண்ணெய் விலை அதிகரிப்பு போன்றவற்றை இவர்கள் இந்த விலை அதிகரிப்புக்கான காரணிகளாகத் தெரிவித்திருந்தனர்.

தொடர்ந்தும் டொலரின் மதிப்பு குறைவடையும் போது தாமும் தமது உற்பத்திகளின் விலையை குறைப்பதாக தெரிவித்திருந்ததுடன், அதுவரையில் சமூக வலைத்தளங்களில் தெரிவிக்கப்படுவதைப் போல தமது உற்பத்திகளை பகிஷ்கரிக்க வேண்டாம் என்றும், அவற்றை தொடர்ந்து கொள்வனவு செய்து, நுகர்ந்து, உள்நாட்டு வியாபாரங்களுக்கு கைகொடுக்குமாறும் அவர்கள் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவ்வாறு பொது மக்கள் தமது உற்பத்திகளை வாங்குவதைத் தவிர்த்தால், தமக்கு மாற்று வழியின்றி, தமது தொழிற்சாலைகளை மூடிவிட வேண்டிய நிலை ஏற்படும் என்பதுடன், தமது தொழிலைக் கூட இழந்து வருமானமிழக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தனர்.

இவ்வாறு இடம்பெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மற்றுமொரு சர்ச்சையான கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது. அதாவது உள்நாட்டு பிஸ்கட் வகைகளை விலை அதிகரிப்பின் காரணமாக பகிஷ்கரிக்குமாறு தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரச்சாரச் செயற்பாடுகள் வேண்டுமென்றே எவ்வித அடிப்படைகளுமின்றி முன்னெடுக்கப்படுவதாகவும், இதன் பின்னால் சதி காணப்படுவதாகவும், வெளிநாட்டிலிருந்து குறைந்த விலையில் பிஸ்கட் வகைகளை நாட்டுக்குள் கொண்டு வந்து விற்பனை செய்வதை ஊக்குவிக்கும் வகையில் இவ்வாறு இடம்பெறுகின்றதா என தாம் சந்தேகிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

சரி, பிஸ்கட் என்பது ஒரு அத்தியாவசிய பொருளா? உற்பத்திக்கான மூலப்பொருட்களின் விலைகள் அதிகரிப்பால் தாமும் விலையை அதிகரிப்பதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும் அரிசி, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்த போதிலும், பொது மக்கள் அவற்றை சொற்ப அளவிலேனும் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளனர். ஆனாலும் பிஸ்கட் என்பது அவ்வாறானதல்ல. கண்டிப்பாக வாங்க வேண்டும் எனும் நிர்ப்பந்தங்கள் எதுவுமில்லை.

இதனை அடிப்படையாகக் கொண்டே சமூக வலைத்தளங்களில் "நீங்கள் பிஸ்கட் உண்ணாவிடின் உயிரிழக்கமாட்டீர்கள். இந்த அளவுக்கதிகமான விலை கொடுத்து வாங்குவதைத் தவிருங்கள்" எனும் பதிவுகள் இடப்பட்டிருந்தன.

**"நீங்கள் பிஸ்கட் உண்ணாவிடின் உயிரிழக்கமாட்டீர்கள். இந்த அளவுக்கதிகமான விலை கொடுத்து வாங்குவதைத் தவிருங்கள்" எனும் பதிவுகள் இடப்பட்டிருந்தன**

**சரியான தகவல் வெளிப்பட்டு, பொது மக்களை சென்றடையும். இலங்கையின் பிஸ்கட் உற்பத்தியாளர்கள் கற்றுக் கொண்ட ஒரு பாடமாக இது அமையட்டும்**

**அசாதாரணமான வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. இவை தொடர்பான பல கண்டனக் கருத்துக்களை பரவலாக காண முடிகின்றது**

அத்துடன், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பிஸ்கட் வகைகளின் தரம் மற்றும் சுவை ஆகியவற்றில் வித்தியாசத்தை அண்மைக் காலத்தில் உணரக்கூடியதாக இருந்ததாக நுகர்வோர் விசனம் தெரிவித்திருந்தனர். குறிப்பாக, தரம் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், வழமையாக பிஸ்கட் பொதி ஒன்றை உடைத்து சிலதை நுகர்ந்த பின்னர் அவற்றை போத்தலில் காற்றுப்புகாத வகையில் அடைத்து வைத்தால், சில நாட்களுக்கு அவற்றை அதே மொறுமொறுப்புடன் நுகரக்கூடியதாக இருக்கும். சுவையிலும் மாற்றம் இருக்காது. ஆனாலும் தற்போது சில ரக பிஸ்கட்கள் பொதியை உடைத்தவுடனே நுகர வேண்டிய நிலையிலுள்ளதாகவும். சில தினங்களுக்கு போத்தலில் இட்டு வைத்து நுகர முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வாக, உற்பத்தி நிறுவனங்கள் தமது சந்தைப்படுத்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, பொது மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத விலைகளில் அமைந்த பொதிகளை சந்தையில் அறிமுகம் செய்யாமல், சிறிய அளவுகளிலான பொதிகளை சந்தையில் அறிமுகம் செய்தால் அவர்களால் நுகரக் கூடியதாக இருக்கும்.

அத்துடன், தமது முக்கியமான தகவல்களை ஊடகங்கள் வாயிலாக பொது மக்கள் மத்தியில் கொண்டும் செல்லும் முன்னர் தாம் தெரிவிக்க இருக்கும் கருத்துக்கள் பற்றி ஊடக ஆலோசகர்கள், பொது உறவுகள் அமைப்பு நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதும் சிறந்தது. அப்போது சரியான தகவல் வெளிப்பட்டு, பொது மக்களை சென்றடையும். இலங்கையின் பிஸ்கட் உற்பத்தியாளர்கள் கற்றுக் கொண்ட ஒரு பாடமாக இது அமையட்டும்.

ஓப்பன் டிக்கெட்

# பலவீனமடையும் இராஜதந்திர உறவு





ஆர்.யசி
yasiharany@gmail.com

சீனாவில் இருந்து பிரம்மாண்டமான ஒரு ஆய்வுக்கப்பல் இலங்கையை நோக்கி வந்துகொண்டுள்ளது, சமுத்திர ஆய்வுகளை தாண்டி விண்வெளி ஆய்வுகளையும் இந்த கப்பல் முன்னெடுக்கும், அதுமட்டுமல்ல நீர்மூழ்கிக் கப்பல்களை கூட இந்த கப்பலால் இயக்க முடியும் என்ற கதைகள் தான் கடந்த இரு வாரங்களாக இலங்கை,இந்திய ஊடகங்களிலும் ஏனைய சர்வதேச ஊடகங்களிலும் முக்கியச் செய்தி. அச்சுறுத்தலான சீனக் கப்பலை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது, இல்லை இல்லை சீனா தடைகளை தாண்டி இலங்கைக்கு வரும் என்ற பரபரப்புக்கு குறைவே இருக்கவில்லை. இறுதியாக, கப்பல் வந்துவிட்டது. வழமை போன்று இந்தியா புஸ்வானம் தானா எனக் கூறிக்கொண்டு, சரி இப்போது எல்லாமே முடிந்துவிட்டது தானே, கையை கொடுத்துவிட்டு கிளம்புவோம் என சென்றுவிட முடியாது. இந்த விவகாரத்தில் மூன்று நாடுகளும் இராஜதந்திர மட்டத்தில் தோலைத் தட்டிக்கொண்டாலும், மூன்று தரப்புக்குமே அடி வயிற்றில் பற்றிக்கொண்டு தான் இருக்கிறது.

சீனாவின் இந்த கப்பல் இலங்கைக்குள் வருவதை இந்தியா விரும்பாததற்கு பல்வேறு காரணங்களை இந்தியா கடந்த சில வாரங்களாகவே வெளிப்படையாக தெரிவித்து வந்தது. குறிப்பாக, இந்த கப்பல் வெறுமனே ஆய்வுக் கப்பல் மட்டுமல்ல, எந்த நேரமும் தாக்குதலை நடத்தவோ அல்லது மிக முக்கியமான ரகசியங்களை சேகரித்து அனுப்பவோ முடியும். ஆகவே இது ஒரு போருக்கான அறைகூவலாக கூட கருத முடியும். அதேபோல் சீனாவின் சகல நீர்மூழ்கிக்கப்பல்களையும் இயக்கும் திறன் இந்த ஆய்வுக்கப்பலுக்கு உண்டு. அதுமட்டுமா, செயற்கை கோள்களை தாக்கும் திறனும் உள்ளதாவும் இந்தியா கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தது. ஆனால் சீனாவோ இதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை, அட என்னப்பா நீங்க, இல்லாத பொல்லாத கதையெல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கீங்க.. யுவான் வாங் - 5 கப்பலின் கடல் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு இசைவானது தானே. அவை எந்த நாட்டின் பாதுகாப்பையோ, பொருளாதார நலன்களையோ பாதிக்காதே எனக்கூறி கதையை முடித்துக்கொண்டது சீனா.

யுவான் வாங் 5 கப்பலின் வருகை என்பது மூன்று நாடுகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட விவகாரமாகும். இலங்கையில் சீனா நிர்மாணித்த துறைமுகத்திற்கு கப்பல் வருகின்றது என்ற சீன தரப்பின் நிலைப்பாடுகளை தாண்டி, இந்தியாவின் நியாயப்பாடுகளையும் இலங்கை கேட்டிருக்க வேண்டும். இலங்கையின் இந்த தீர்மானம் குறித்து இந்தியா ஆரம்பத்தில் இருந்தே அதிர்ப்தியை வெளிப்படுத்தி வந்தது, இப்போதும் இந்தியாவின் வேதனை குறைந்தபாடில்லை, சீனாவின் கப்பலினால் இந்து சமுத்திரத்தில் ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் இந்தியா தக்க பதிலடி கொடுக்கும் என்ற கோவத்தையும் கொட்டித்தீர்த்துக்கொண்டுள்ளது. இலங்கை தீவு பல்வேறு நாடுகளின் ஒற்றர் தீவு என்ற குற்றச்சாட்டுக்களை இந்தியா நீண்டகாலமாக முன்வைத்து வருகின்றது. 80களில் இலங்கையில் இஸ்ரலிய நலன் காக்கும் பிரிவு, வொயிஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலையம் போன்றவை அமைக்கப்பட்ட போது, இவை அனைத்துமே இந்தியாவை வேவுபார்க்க பயன்படுவதாக வெளிப்படையாக விமர்சித்தது. அதுமட்டுமல்ல திருகோணமலை எண்ணெய் குதங்களை அமெரிக்காவிற்கு கொடுக்க தீர்மானம் எடுப்பதாகவும், திருகோணமலை துறைமுகமும் அமெரிக்காவிற்கு தாரைவார்க்கப்படுவதாகவும் கூறிய இந்தியா, இவற்றையெல்லாம் நிறுத்த வேண்டும் எனவும் இலங்கைக்கு வலியுறுத்திய வரலாறுகள் உள்ளன. இப்போதும் சீனா இலங்கையில் தடம் பதித்து இந்தியாவை கண்காணித்துக்கொண்டுள்ளது என்ற அச்சமும் இந்தியாவிற்கு உள்ளது.

அதேபோல், சீனாவுக்கும் இந்த கப்பல் விவகாரத்தில் மன வருத்தங்கள் இல்லாமலில்லை, குறித்த நாளில், சீனாவால் இலங்கைக்குள் வரமுடியவில்லை என்பதை தாண்டி அவர்கள் நினைத்தால் போல் வரமுடியவில்லை என்பதில் சீனா மிகப்பெரிய மன வருத்தத்தில் இருப்பதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். இதில் முக்கியத் தரப்பான இலங்கைக்கு இரு பக்க தலைவலியே ஏற்பட்டுள்ளது. இவ்விரு நாடுகளுடனும் கையாண்ட சர்வதேச தொடர்பானது முறையாகவும் நேர்த்தியாகவும் அமையவில்லை. உலக நாடுகளுடன் கணக்குவழக்குகளை கையாளும் போது, பொறுப்பில்லாது நடந்துகொள்ள முடியாது அல்லவா. அதுவும் பெரிய நாடுகளுடன் இலங்கை இவ்வாறு முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது ஆரோக்கியமானதல்ல. இதில் நாம் எடுக்கும் சகல தீர்மானங்களும் இலங்கையின் பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட காரணிகளாகும்.

யுவான் வாங் 5 கப்பலின் வருகையுடன் இலங்கையின் வெளியுறவு கொள்கை தொடர்பிலும், நாம் எமது அண்டைய நாடுகளுடன் இராஜதந்திர ரீதியில் கையாளும் கணக்கு வழக்குகள் தொடர்பிலும் மிகப்பெரிய சர்ச்சைகள் எழுந்துள்ளன. அதேபோல் இலங்கை இப்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையுடன் இந்த சம்பவமானது பாரதூரமான நெருக்கடியை உருவாக்கும் என்பதை மறுக்க முடியாது. இவ்வாறான நிலைமைகளில் நாம் செய்யும் சிறிய தவறு கூட அடுத்ததாக இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் வெளியுறவு கொள்கை என அனைத்தையும் பாதிக்கும். ஆனால் உண்மையிலேயே இலங்கையின் இராஜந்ததிர உறவு வீழ்ச்சி கண்டுவிட்டது, அண்டை நாடுகளுக்கு இலங்கை மீதான சந்தேக பார்வையே உள்ளது என்பதை மறுப்பதற்கும் இல்லை. ஒரு காலகட்டத்தில் இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் மதிப்பு உயரிய மட்டத்தில் இருந்தது, ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. அந்தளவுக்கு இலங்கையின் அரசியல் நிருவாகம் படுமோசமாகிவிட்டது. அசம்பாவிதம் இடம்பெற முன்னர் தடுக்கும் இராஜிதந்திர கொள்கைகள் மாற்றம்பெற்று சகல நாடுகளிடமும் மண்டியிடும் நிலைமைக்கு தள்ளப்பட்டுவிட்டோம்.


இந்தியாவின் சுதந்திர தின நிகழ்வு இடம்பெறும் காலகட்டத்தில் இந்தியாவின் எதிரிகளை இலங்கைக்குள் வரவழைத்து இந்தியாவின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டுள்ளோம். ஒருபுறம் பாகிஸ்தானிய ஏவுகணை கப்பல் இலங்கையில் நங்கூரமிடப்படுகின்றது, மறுபக்கம் சீன உளவுக்கப்பல் வருகின்றது என்றால் இந்தியாவினால் எவ்வாறு பெருமூச்சு விடமுடியும். இவ்வாறான நிலைமைகளில் சிந்தித்து செயற்படும் கொள்கையை இலங்கை மறந்துவிட்டதா அல்லது சிந்திக்கும் ஆற்றலே இல்லையா என்ற விமர்சனத்திற்கு உள்ளாகிவிட்டோம்.

இராஜதந்திர நகர்வுகளை கையாளும் விடயத்தில் நாம் இன்னமும் கற்க வேண்டியள்ளது. நாம் மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளையில் உணவு, எரிபொருள், மருந்து மற்றும் உரம் ஆகிய மிக அவசியமான உதவிகளை செய்துகொண்டுத்த இந்தியாவை எவ்வாறு இலங்கை பகைத்துகொள்ள முடியும். இந்த கப்பலின் வருகையுடன் அல்லது அதன் பின்னராவது இலங்கைக்கான உதவிகளை முழுமையாக நிறுத்தும் தீர்மானங்களை இந்தியா எடுக்க முடியும். இது இலங்கையின் உள்ளக விவகாரங்களில் கூட நெருக்கடியை ஏற்படுத்தும். ஆய்வு என்பதே உளவுபார்ப்பதுதான், அதற்கு மாற்று விளக்கமே கொடுக்க முடியாது. ஆகவே இந்த கப்பலின் வருகை கண்டிப்பாக இன்னொரு நாட்டின் திறனை ஆய்வு செய்வது மட்டுமேயாகும்.

இப்போது யாரும் போரை விரும்பவில்லை, வெறும் வார்த்தை விளையாட்டுக்களில் கபடி ஆடிக்கொண்டுள்ளனர். ஆனால் விளையாட்டு வினையாக மாறலாம். இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு அமைய இந்தியா விரும்பாத எதனையும் இலங்கை செய்யக்கூடாது அவ்வளவு தான். அதேபோல் சீனா இந்த வலயத்திற்குள் முடக்கப்பட வேண்டும் என்பதே மேற்கு நாடுகளின் எதிர்பார்ப்பாகும். மறுபுறம் சீனாவோ தன்னை விஸ்தரித்துக்கொண்டே செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. இதில் எங்காவது ஒரு உரசல் ஏற்பட்டால் நிச்சயமாக அது போராகவே வெடிக்கும். எல்லாவற்றையும் தாண்டி இலங்கை இன்று எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கலில் சீனாவை எதிர்க்க முடியாது, சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு சீனா கண்டிப்பாக தேவைப்படுகின்றது. மறுபுறம் இந்தியாவும் இலங்கைக்கு மிக முக்கிய நாடாகும். இந்த விடயத்தில் எவ்வாறு இராஜதந்திர ரீதியில் இரு வல்லரசுகளையும் கையாளப்போகின்றது என்பது இலங்கைக்கு மிகப்பெரிய சவாலே.



## மக்கள் குரல் எடுபடுமா?



# ஆபத்தில் திருக்கோவில்

வி. ரி சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில் தனித் தமிழர் வாழும் பெரிய நிலப்பரப்புடன் கூடிய திருக்கோவில் கடலோரப் பிரதேசம், இல்மனைட் அகழ்வால் மீண்டும் ஆபத்தில் சிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு வேலைக்கு என்று, கடந்த ஏழு வருடங்களாக ஒரு குறிப்பிட்ட பாரிய நிறுவனம், பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

இதன்போது அப்பகுதி மக்கள் பாரிய எதிர்ப்பலைகளை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதன் காரணமாக, அவை நிறுத்தப்பட்டிருந்தன. ஆனால், இன்று இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடியை மையமாக வைத்து, அரசாங்கத்துக்கு வருவாய் சேர்க்கும் நோக்கத்துடன் மீண்டும் அகழ்வு பணி ஆரம்பிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில், தம்பட்டை தொடக்கம் உமிரி வரைக்கும் இந்த அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக இருந்தது. இருந்தாலும், சனச்செறிவு கூடிய பிரதேசங்களான தம்பட்டை தொடக்கம் விநாயகபுரம் போன்ற பகுதிகளில் இல்மனைட் அகழ்வு மேற்கொள்ள முடியாது என்று கூறப்பட்ட காரணத்தால், தற்போது விநாயகபுரம், கோரைக்களப்பு தொடக்கம் உமிரி வரைக்குமான சுமார் நான்கு கிலோ மீற்றர் தூர கடலோர பகுதி, இல்மனைட் அகழ்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

எனினும், அந்தப் பிரதேச மக்கள் தங்களது எதிர்ப்புகளை தெரிவித்த வண்ணமே இருக்கின்றார்கள் . அரசஅதிகாரிகளும் அதற்கான பதில்களை தெரிவித்தவண்ணம் இருக்கின்றார்கள்.

இதனை ஆய்வு செய்த சுற்றுச்சூழல் அதிகார சபையும், கடலோர வளங்கள் பாதுகாப்பு திணைக்களமும் அகழ்வுக்கு ஓரளவு சாதகமான பதிலை வழங்கியிருப்பதாக கூறப்படுகிறது . ஆனால், இந்த அறிக்கையில் மக்களுக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றது. அரசு சார்ந்து இந்த அறிக்கை வந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

இன்னும் பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் இதற்கு எந்த அங்கீகாரத்தையும் வழங்கவில்லை. இதன் காரணமாக நடவடிக்கை தடைப்பட்டு வருகின்றது. அவர்களது ஒப்பமும் பெறப்பட்டால் மறுகணமே இவ் அகழ்வு ஆரம்பிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

ஆஸ்திரேலியா நிதியுதவியுடன் இயங்கும் பாரிய நிறுவனமே இந்த அகழ்வைச் செய்யவுள்ளது. இதன் அலுவலகம் தாண்டியடி எனுமிடத்தில் இயங்கி வருவதாகவும், அங்கு மக்களுக்கு உதவி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஏலவே , மக்களின் கருத்துக்கணிப்புகளை திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருந்ததால் அது நிறுத்தப்பட்டிருந்தது.

அதுமட்டுமல்ல, திருக்கோவில் பிரதேச சபையானது தவிசாளர். இ.வி. கமலராஜன் தலைமையில் நடைபெற்ற சபை அமர்வி,ல் இந்த இல்மனைட் அகழ்வு இடம்பெறக்கூடாது என்று தீர்மானம் மேற்கொண்டிருந்தது.

அது மாத்திரமல்ல, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாட்டை மக்கள் சார்பாக முன்வைத்தது. அங்கு பலரும் அழைக்கப்பட்டு, பிராந்திய ஆணையாளர் அசீஸால் விசாரணை செய்யப்பட்டது .

அதன் பொழுது எடுக்கப்பட்ட தீர்மானமாக, இந்தச் சுற்றுச்சூழல் அதிகார சபையின் அறிக்கை மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அது அரசியல் சார்ந்தது. எனவே சுதந்திரமான சுயாதீனஅறிக்கை தேவை. ஆகவே, கிழக்கு பல்கலைக்கழகம் அல்லது தென்கிழக்கு பல்கலைக்கழகம் அல்லது யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சேர்ந்த புவியியல் ஆய்வாளர்கள், ஆய்வை மேற்கொண்டு ஒரு சுதந்திரமான அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டும் . அதன் பின்பு இந்த அகழ்வு தொடர்பாக தீர்மானம் எடுக்கலாம் என்று அங்கு கூறப்பட்டது. இதன் காரணமாகவும் இது தடைபட்டது.

உண்மையிலேயே , இவ் அகழ்வு இடம்பெற்றால் கோரைக்களப்பு, விநாயகபுரம், பாலக்குடா, உமிரி, சங்கமன்கிராமம், தாண்டியடி, கோமாரி, மணல்சேனை, செல்வபுரம் ஆகிய தனித்தமிழ் ஏழைக் கிராமங்களின் 5,000 குடும்பங்களுக்கு மேல் இந்த இல்மனைட் அகழ்வால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறப்படுகின்றது.

இலங்கையின் பிரதான வளமாக கூறப்படுகின்ற கடல் ஆமை முட்டையிடுகின்ற பிரதேசமும் இதுதான். இப் பிரதேசத்தில் கடல் ஆமை முட்டைகள் கூடுதலாக இடப்படுகிறது . மேலும் இந்தப் பிரதேசத்தில் மரக்கறி செய்கை, களப்பு நன்னீர் மீன்பிடி போன்றவை சிறப்பாக இடம்பெற்று வருகின்ற ஒரு கிராமிய பிரதேசமாகும்.

மேலும், வங்காள விரிகுடா கடலில், கற்பாறைகள் மிகவும் கூடுதலாக இருக்கிற பிரதேசமாக இப் பகுதி விளங்குகிறது. இப்போதும் 21 கப்பல்கள் இங்கு அமிழ்ந்து கிடப்பதாக சொல்லப்படுகிறது. இவை எல்லாம் மொத்தமாக சூறையாடப்படுகின்ற ஒரு சம்பவமாக இதனை மக்கள் பார்க்கிறார்கள்.

இது இவ்வாறு இருக்க, நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் மக்கள் வாழ்கின்ற தனித்தமிழ் பிரதேசம், எதற்காக தேர்வு செய்யப்பட்டது? என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

உண்மையில் இல்மனைட் அகழவேண்டுமானால், உகந்தைக்கு அப்பால் கிரிந்த, ஹம்மாந்தோட்டை வரையிலான சுமார் 300 கிலோ மீற்றர் தூரமான கடலோரப் பிரதேசம் பொருத்தமானது. ஏனெனில், ஜனசந்தடியற்ற காட்டுப்பகுதி அது. அதிலே இந்த இல்மனைட் அகழ்வை எவ்வித பாதிப்பும் இன்றி மேற்கொள்ளலாமே.

அதை விட்டுவிட்டு, இங்கு வந்து மக்கள் வாழ்கின்ற இடத்திலே இந்த அநியாயத்தை ஏன் செய்ய வருகிறார்கள் என்று அந்த மக்கள் கேள்வி எழுப்பினார்கள் .

இந்தப் பிரதேசம் கடலும் களப்பும் அருகருகே உள்ள பிரதேசமாகும். இடையிலுள்ள மண்பரப்பை அகழ்தால், ஒன்றாக சேர்ந்து இந்த கிராமங்கள் கடலுக்குள் வாங்கப்பட அபாயமும் இருக்கின்றது. இதைவிட இங்கே அகழப்படும் அத்தனையும் ஒலுவிலுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு தரம் பிரிக்கப்பட்டு இந்த மண்ணை வெளிநாட்டுக்கு அனுப்ப இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எஞ்சிய மண்ணை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் விரைவில் பாரிய வெகுஜன போராட்டத்தில் மக்கள் தெரிவித்தார்கள். எனினும், தற்பொழுது அரச ஸ்திரமற்ற நிலையில் அழுத்தங்கள் கூடி வருகின்ற காரணத்தால் இல்மனைட் அகழ்வு இடம்பெற்றுவிடுமோ என்று மக்கள் அச்சத்தில் காணப்படுகின்றார்கள்.

அந்தப் பிரதேசத்துக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதை பார்ப்போம். இல்மனைட் ஆலையில் இருந்து வெளியேறும் இரும்பு குளோரைடு மற்றும் அமிலக் கழிவுகள் சுற்றியுள்ள நிலத்தையும், நிலத்தடி நீரையும் பாழ்படுத்த வாய்ப்பிருக்கிறது. ஆலையில் பிரித்தெடுக்கப்படும் ஜிர்க்கான் கனிமம் கதிரியக்கத் தன்மையைக் கொண்டிருப்பதால் ஆலையை சுற்றி 20 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வாழும் மக்களுக்கும் உயிரினங்களுக்கும் மரபணு நோய்களும், பல்வேறு வகைப் புற்றுநோய்களும் (தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணவாளக்குறிச்சியைச் சுற்றி வாழும் மக்களைப் போல) உருவாக வாய்ப்பிருக்கிறது.

திருக்கோவில், தம்பிலுவில், வினாயகபுரம், உமிரி பகுதியில் வானுயர வளர்ந்துள்ள தென்னைகள் அனைத்தும் படிப்படியாக அழிந்துவிடும். பல ஆயிரக்கணக்கான மக்களின் மீன்பிடி வாழ்வாதாரம் அழியப்போகின்றது.

டைட்டானியம், டைட்டானியம் ஆக்சைடு என்ற அதன் ஆக்சைடு வடிவத்தில் இரும்பு மற்றும் யுரேனியம், தோரியம் போன்ற கதிரியக்கத் கனிமங்களுடன் கிடைக்கிறது.

இயற்கையான அமைப்பை நாம் தொந்தரவு செய்யாத வரையில் கதிரியக்கத் கனிமங்களின் நிலைத்தன்மை பாதிக்கப்படாத வரையில் அவை அபாயகரமான கதிரியக்கத்தை வெளிப்படுத்துவதில்லை. தோண்டி எடுத்து அவற்றைப் பிரித்தெடுத்துச் சுத்தம்



செய்யும் போது, அவை கதிரியக்கத்தை வெளிப்படுத்துகின்றன. அதன் காரணமாகத் தொழிலாளர்களும் அருகாமையில் உள்ள மக்களும் புற்று நோய் மற்றும் குறையுள்ள குழந்தைப்பிறப்புகளுக்கு ஆளாகிறார்கள்.

இல்மனைட் வழக்கமாக ‘நிர்வாணச் சுரங்க முறை’யில் எடுக்கப்படுகிறது. அதாவது புவிப் பரப்பின்மீதுள்ள அனைத்துத் தாவரங்களும் அழித்தொழிக்கப்பட்டு, பூமியை நிர்வாணமாக்கி, தாதுக்களைத் தோண்டி எடுக்கிறார்கள். மேல் மண்ணை அகற்றி வைத்துவிடுவார்கள். தாதுப்பொருள் அடங்கிய கீழ் மண் எவ்வளவு ஆழம்வரை கிடைக்கிறதோ அதனை எடுத்து முதல் கட்டச் சுத்திகரிப்புக்கு அனுப்புவார்கள். இதுவரை கிடைத்த செய்திகளின் படி 6 மீற்றர் முதல் 20 மீற்றர் ஆழம் வரை தோண்டப்படும் என தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆழமாகத் தோண்டுவது நிலத்தடி நீர்வளத்தைப் பாதிக்காது என்றாலும், நிலத்தடியை ஒட்டிய ஆழக்குறைவான நீர்வளமும் ஓடைகளும் வடிகால்களும் குளங்களும் மறைந்துபோக நீர்வளம் குறைய ஆரம்பிக்கும்.

நிலத்தின் மீதுள்ள தாவரங்கள் அகற்றப்படும்போது, வெப்பம் நேரடியாகப் பூமியைத்தாக்கும். அருகாமைக் கடலிலிருந்து வரும் குளிர்ந்த காற்று வெப்பமடையும். இதன் காரணமாக உள்ளூர் மழையின் அளவும் தன்மையும் முறையும் மாற்றமடையும்.

அனைத்தையும்விட மிக முக்கியமானது, கடல் அருகாமையில் இருப்பதால் நிலத்தடியில் கடல் நீர் புகுவதே. இதனால் குடிப்பதற்கும் வாழ்வதற்குமான நீர் அரிய பொருளாகிவிடும். நண்டு இனம் முற்றாக அழிக்கப்படும்; வினாயகபுரம் பகுதியில் கண்டல் தாவரங்கள் அழிவடையும். இதனால் இறால் வளம் முற்றாக அழியும். இதனை நம்பி தொழிலில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழப்பர்.

இல்மனைட் உற்பத்தி முறையில் வெளியேறும் மற்ற முக்கியப் பொருள் சல்பர் டை ஆக்சைடு, உள்ளூர் அளவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அது, அந்தப் பகுதியில் அமில மழையை ஏற்படுத்தும். வெளியேறும் திண்மக்கழிவுகள் நிலத்தையும் நீரையும் கடலையும் நஞ்சாக்கும். இந்த முறையில் இரும்பு குளோரைடும் உற்பத்தியாகும். இதனை முறையாகப் பாதுகாத்து வைக்கவில்லை என்றால், அது சுற்றுச்சூழலில் கலந்துவிடும்.

வழக்கமான ஆலை மாசுபாடுகளுக்கு அப்பால் அபாயகரமான கழிவுகளின் தாக்குதலுக்கும் மக்கள் ஆட்பட வேண்டியிருக்கும். டைட்டானியம் டெட்ரா குளோரைடு ஒரு பிரச்சினைக்குரிய வாயுவாகும். அது நீருடன் கடுமையான வினையாற்றி ஹைட்ரஜன் குளோரைடு வாயுவை உருவாக்கும். ஹைட்ரஜன் குளோரைடு தரையைத் தழுவியபடியே பயணித்துப் பெரிய பகுதிக்குப் பரவும். அது பரவும் இடம் முழுவதும் மரணம் பரவும்.

எத்தனை சிறப்பாகப் பராமரிக்கப்படும் ஆலையிலும் விபத்து ஏற்படுவது இயற்கை என்பதால் இதுபோன்ற விபத்துகள் ஏற்படாது என்று 100 சதவீதம் உத்தரவாதம் தர முடியாது.

மக்கள் குரல் எடுபடுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



யானைகள் எதிர் மனிதர்கள்

# அதிகரிக்கும் அழிவுகளும் உயிரிழப்புகளும்




ஏ.எச்.ஏ ஹுஸைன்

husseinmedia000@gmail.com






ஒவ்வோர் ஆண்டும் காட்டு யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் இடம்பெறும் மோதலில் சுமார் 300 இற்கு மேற்பட்ட யானைகளும் 100 இற்கும் மேற்பட்ட மனிதர்களும் பலியாவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இறப்பு எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் வருடாந்தம் 60 மனிதர்களும் 200 யானைகளும் என்றவாறு இருந்தது.

இலங்கையில் பல பாகங்களில் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்று வருகிறது. மனிதர்கள் யானைகளின் இடங்களை ஆக்கிரமிக்க ஆக்கிரமிக்க, இந்த மோதலும் அதிகரிப்பதாக வனவிலங்கு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் மனிதர்களை தாக்குவதோடு மட்டுமல்லாமல், வாழ்விடங்கள் உடைமைகள் வாழ்வாதார வருமானம் ஈட்டும் பயிர்கள் என்பனவற்றையும் நாசப்படுத்தி விடுகின்றன.

இந்த வருடத்தின் (2022) முதல் 4 மாதங்களில் மாத்திரம் காட்டுயானைகள் எதிர் மனிதர்கள் எனும் விடயத்தில் 34 மனித உயிர்கள் பலியாகியிருப்பதாக விவசாய> வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதே காலப்பகுதியில் 47 காட்டு யானைகளும் உயிரிழந்ததாகவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த 47 காட்டு யானைகளில், 13 காட்டு யானைகள் துப்பாக்கிச் சூடு காரணமாகவும் மேலும் 17 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கியும் மரணித்துள்ளன.

இலங்கையின் 19 மாவட்டங்களில் உள்ள 131 பிரதேச செயலகப் பிரிவுகளில் காட்டுயானைகள் எதிர் மனித மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் காட்டு யானைகள் எதிர் மனிதர்கள் முரண்பாடு தீவிரமடைந்துள்ளது.

2019ஆம் ஆண்டில், 407 காட்டு யானைகள் உயிரிழந்த அதேவேளை 122 மனிதர்களும் காட்டு யானைகளின் தாக்குதலினால் பலியாகியுள்ளனர். 2020ஆம் ஆண்டில், காட்டு யானைகள் எதிர் மனித மோதலால் 112 பேர் உயிரிழந்தனர்.

2021ஆம் வருடத்தில் காட்டு யானைகள் எதிர் மனித மோதலால் 142 பேர் உயிரிழந்ததாகவும் விவசாய வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

யானை ஒரு நாளைக்கு சராசரியாக 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை நடக்கும். தினமும் 250 கிலோ கிராம் வரை உணவு எடுத்துக்கொள்ளும். 150 லீற்றர் தண்ணீர் குடிக்கும்.

2012ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஒகஸ்ட் 12ஆம் திகதி உலக யானைகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் நோக்கமே யானைகளைப் பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான். இந்நிலையில், இன்றைய சூழலில் காட்டு யானை-மனித எதிர்கொள்ளல் என்பது மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

காட்டை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் விவசாயிகள் தென்னை, வாழை, கரும்பு, பலா, நெல், மரவள்ளி போன்ற நீண்ட கால மற்றும் குறுகிய கால பணப் பயிர்களை அதிகளவில் பயிரிடுகின்றனர்.

இந்தப் பயிர்கள் யானைகளுக்கு மிகப் பிடித்தமானது என்பதால் காட்டை ஒட்டியுள்ள விவசாய நிலங்களைத் தேடி காட்டு யானைகள் வெளியே வருகின்றன.

கோடைக்காலங்களில் யானைகளுக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது. அவற்றுக்கு வியர்வை சுரப்பிகள் கிடையாது. அதனால் தண்ணீருக்காக அனைத்து இடங்களுக்கும் செல்லும். தனக்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் வரை காட்டு யானைகள் நடக்கத் துவங்கும். அந்த நோக்கத்திற்காக அவை மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவுகின்றன.

வனத்தை விட்டு வெளியே வரும் காட்டு யானைகள் மின்சார வேலிகளின் மூலம் கொல்லப்படுகின்றன. துப்பாக்கிச் சூட்டினாலும் அவை கொல்லப்படுகின்றன. விஷம் வைத்தும் கொல்லப்படுகின்றன. ரயிலில் அடிப்பட்டும் இறக்கின்றன. யானைத் தந்தம், தோல், கால் எலும்பு போன்றவற்றிற்காக வேட்டையாடப்பட்டும் காட்டு யானைகள் கொல்லப்படுவதுமுண்டு. அநுராதபுர மாவட்டத்திலுள்ள வில்பத்து வனப் பகுதியில் மின்னல் தாக்கி நான்கு காட்டு யானைகள் உயிரிழந்த சம்பவம் 2016ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தது. தாயும் மூன்று குட்டிகளும் இடிமின்னலால் தாக்கப்பட்டு உயிரிழந்திருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீப சில நாள்களுக்கு முன்னர் இந்த வருடத்தில் முதல் முறையாக துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 20 வயது மதிக்கத் தக்க காட்டு இறந்து கிடந்தது

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடத்தின் ஜுலை மாதம் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் மின்சார வேலியில் அகப்பட்டமை, நஞ்சுண்டமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 13 காட்டு யானைகள் உயிரிழந்திருப்பதாக மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

சமீப காலங்களில் காட்டு யானைகளால் மனிதர்கள் உயிரிழப்பதும் மனித நாச வேலைகள் உள்பட பல்வேறு காரணங்களால் யானைகளின் உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

இலங்கையில் காட்டு யானைகள் மனிதர்களைத் தாக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதற்கு தீர்வு காணும் முகமாக காலத்துக்கு காலம் வரும் அரசாங்கங்கள் அவ்வப்போது பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறிக் கொள்கின்ற போதும் இந்தப் பிரச்சினை குறைந்தபாடில்லை.

கிராமங்களுக்குள் ஊடுருவும் காட்டு யானைகள் அவ்வப்போது காட்டுக்குள் துரத்தப்படுகின்றபோதும் மீண்டும் அவை தமது வழித்தடங்களில் பயணிக்கின்றன. இடைவழியில் அகப்படுவதையெல்லாம் அவை துவம்சம் செய்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் மனித உயிர்களும் பலியாகின்றன. காட்டு யானைகள் ஊர்களுக்குள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்த மின்சார வேலிகள் அமைக்கப்பட்டிருந்தாலும் காட்டு யானைகள் அவற்றுக்கும் பழக்கப்பட்டு எதிர் வினையாற்றுகின்றன. மின்சாரவேலிகளை காலால் மிதித்து விட்டு பாதிப்பில்லாமல் தமது பயணத்தைத் தொடரும் புத்திசாலிகளாக காட்டு யானைகள் மாறிவிட்டிருக்கின்றன.

யானைகள் அழிந்தால் காடுகள் அழியும். வருங்கால சந்ததியினருக்காக யானைகளையும் காடுகளையும் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது.

ஓர் இடத்தில் உண்ட தாவர உணவின் மூலம், அதன் சாணத்தில் இருக்கும் விதைகளுக்கு உயிர்கொடுத்து புதுச் செடிகளையும் மரங்களையும் மற்றோர் இடத்தில் வளர்க்கும் .செயற்பாட்டையும் செய்து காட்டு யானைகள் இயற்கைச் சமநிலையைப் பேண உதவுகின்றன என்றும் சொல்லப்படுகின்றது.




அ. அச்சுதன்


திட்டமிட்டு கோவில் சூழல்

# கடைகளால் ஆக்கிரமிப்பு



**இலங்கையின் கிழக்கே கிழக்கு மாகாணத்தில் உலகப்பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருக்கோணமலைத் துறைமுகம் அமைவதற்குச் சாதகமாயுள்ள மலைகளொன்றின் உச்சியில் இருக்கின்றது திருக்கோணேஸ்வரம்.**

மூன்று மலைகளைக் கொண்டு முக்கோண வடிவில் அமைந்திருப்பதால் திருக்கோணமலை என்று இந்த நகரம் பெயர்பெற்றது. இந்த நகரத்தில் பிரசித்தி பெற்ற திருத்தலம் கோணேஸ்வரம் ஆதலால் திருகோணமலை எனவும் இந்த நகரம் பெயர் பெறுகின்றது.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துக்களின் திருத்தலமாகிய திருக்கோணேஸ்வரம் புனிதஷேத்திரமாக இருந்து வந்ததைப் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன. எனவே இந்தத் தலத்தின் இயல்பான தெய்வீக விசேடத்தினாலே இந்நகரம் திருக்கோணமலை என்ற பெயரால் வழங்கி வருகின்றது.

தெட்சண கயிலாயம் என்று திருக்கோணேஸ்வரம் போற்றப்பட்டு வருகின்றது வடக்கே இமயக்கொடுமுடியில் கயிலாய சிகரத்தில் கயிலை நாதன் எழுந்தருளியிருப்பது போல தெற்கே திருக்கோணமலையில் கோணேசப்பெருமான் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்றார். பூகோள அமைப்பில் இந்த இரண்டு தலங்களும் ஒரு அட்சரரேகையில் அமைந்திருப்பதையும் இவையிரண்டுக்கும் நடுவே தில்லைத் திருத்தலம் அமைந்திருப்பதையும் திருமூல நாயனார் திருமந்திரத்திலே குறிப்பிடுகின்றார். இந்தத் தலங்கள் அமைந்திருக்கும் பாங்கை விஞ்ஞானரீதியாகவும் ஆராய்வது மேலும் திருக்கோணேஸ்வரத்தின் மகிமையை அறிவதற்கு உதவியாயிருக்கும்.

குளக்கோட்டு மன்னனால் திருப்பணிகள் செய்யப்பட்ட சரித்திரி முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தை பாதுகாப்பதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடன் அக்கறை செலுத்தவேண்டும் ஆலயத்துக்குச் செல்லும் வழியில் 2008க்குப் பின் அவசர அவசரமாக வீதியின் இருமருங்கிலும் தென்பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் எந்த உத்தரவும் இன்றி தற்காலிக கடைகளை அமைத்தனர். அக்கடைகள் தற்போது 58ஆக அதிகரித்துவிட்டன. இக்கடைகள் அமைப்பவர்களுக்கும் திருக்கோணேஸ்வரர் கோயிலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. திட்டமிட்டு ஆலயச்சூழலை ஆக்கிரமிப்பது போல் இக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகம் பல இடங்களிலும் முறைப்பாடு செய்த போதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

தற்போது திருக்கோணேஸ்வரம் செல்லும் பாதைக்கு அருகில் கோவில் சமதரையில் இவர்களுக்கு நிரந்தர கட்டடம் அமைக்க தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு வருகின்றது. 03-08-2022 இல் தொல்லியல் திணைக்களத்தினால் திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகசபை தலைவர், செயலாளரும் அழைக்கப்பட்டு தெருவோரம் வர்த்தகம் செய்வோருக்கு கோவிலுக்கு சமீபமாக நிரந்தர கட்டடம் அமைக்க தங்களுக்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்துள்ளதாகவும் அதற்கு ஆலய நிர்வாகம் சம்மதம் தெரிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த சில வருடங்களாக தொல்லியல் திணைக்களம் கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளை தடுத்து வருவதை அனைவரும் அறிவர். தேரோடும் வீதியை அகலிக்க தடுத்தனர். வாசலில் பெருங்கோபுரம் கட்டுவதற்கு திணைக்களம் இடையூறுகளை விளைவித்து வருகிறது. தற்போது இந்திய அரசாங்கத்திடம் திருக்கோணேஸ்வரத்தின் பாரிய திருப்பணி வேலைகளை நிறைவேற்றித் தருமாறு ஆலய அறங்காவலர் சபையும், இந்து சமய நிறுவனங்களும் வேண்டுதல் விடுத்து அவை சாதகமாக அமைய உள்ள நேரத்தில் திட்டமிட்டு ஆலய சுற்றாடலை அபகரிக்கும் நோக்கில் நிரந்தர கடைகளை கட்டுவதற்கு முயற்சி எடுக்கின்றனர். இவ்விடயத்தை கருத்தில் கொண்டு சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

இதேவேளை தொல்லியல் திணைக்களத்தின் இந்த நடவடிக்கைக்கு அகில இலங்கை இந்து மாமன்றம், மூதூர் பிரசேச இந்து குருமார் சங்கம் ஆகியன கடும் கண்டனத்தை வெளியிட்டு உள்ளன.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் திருகோணமலை திருக்கோணேஸ்வரம் சிவாலயத்தை சிங்கள பௌத்த மயமாக்கும் முயற்சி தீவிர மடைந்திருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பியான செல்வராஜா கஜேந்திரன் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.


உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கத்தின் அங்கமாக உள்ள தொல்பொருள்



திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களத்தினால் தமிழ் மக்களின் பாரம்பரியங்களுக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுகின்றன. தற்காலிகமாக வழங்கப்பட்ட கடை தொகுதியை நிரந்தரமாக வழங்க தொல்பொருள் திணைக்களம் முயற்சிப்பது முற்றிலும் தவறானது. திருக்கோணேஸ்வரத்தை பௌத்த மயமாக்கும் நிகழ்ச்சி நிரலை உடன்நிறுத்த வேண்டும் என்றார் கஜேந்திரன் எம்.பி.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சுற்றாடலில் திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணியை மட்டும் தொல்லியல் திணைக்களம் தலையீடு செய்து திருப்பணிகளை தடுத்து வருகின்றது. திருக்கோணேஸ்வரம் இந்திய மக்களுடனும் தொடர்புடைய கோயில் இந்திய அரசாங்கமும் திருக்கோணேஸ்வரர் திருப்பணி தொடர்பாக விரைவில் செயற்படுவதற்கு பிரதமரும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன் அக்கறை செலுத்தவேண்டும்.





# பலவந்தமாக திணிக்கப்படும் ஹிந்தி மொழியும், மயான அமைதியும்

தாய்மொழிக்கு அப்பால் எத்தனை மொழிகளை கற்றுக்கொண்டாலும் அது நல்லது, ஆனால் வேறுறொரு மொழியைக் கற்பவருக்கு அம்மொழி பிரயோசனமானதாய் இருக்கவேண்டும். இலங்கையில் பலரும் பல மொழிகளைக் கற்றுக்கொண்டுதான் இருக்கின்றனர்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்துடன் கல்வியை இடைநிறுத்திக்கொண்டவர்கள் அல்லது பாடசாலைகளில் இருந்து இடைவிலகியவர்களில் பலரும் வேறு மொழிகளைக் கற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்கு தொழில் நிமிர்த்தம் சென்றிருக்கின்றனர்.

எமது நாட்டின் அரச கரும மொழிகளான தமிழ், சிங்களம், இணை மொழியான ஆங்கிலம் ஆகியவற்றுக்கு அப்பால், கொரியன், ஜப்பான், பிரென்ஞ், உள்ளிட்ட தொழில் முறைக்குரிய மொழிகளையும் கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறான மொழிகளை கற்றுக்கொடுப்பதற்கு பல நிறுவனங்கள் அங்கிகாரம் பெற்றுக்கொண்டுள்ளன. அதேபோல, சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இந்நிலையில்தான், ஹிந்தி மொழி கற்பிக்கப்படுவது தொடர்பில் பரவலான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவை பொருத்தவரையில் பல மாகாணங்களில் ஹிந்தி மொழி பலவந்தமாக திணிக்கப்படுவதாகவும், ஹிந்தியை கற்றுக்கொள் மாட்டோம் என்றும் எதிர்ப்பு குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஹிந்தி மொழி திணிப்புக்கு கடும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றன.

எனினும், யாழ். இந்துக் கல்லூரியில் ஹிந்தி மொழி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஹிந்தி வகுப்புகள் ஆரம்பிக்கப்படுவது இது முதல் தடவையல்ல, ஹிந்தி தினத்தன்று, இலங்கை பொலிஸாருக்கு ஹிந்தி வகுப்புகள் இவ்வாண்டு ஜனவரி 11 ஆம் திகதியன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மொழியைக் கற்றல் என்பது தொழில் முறையின் ஊடாக வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கும், பண்பாட்டுக்கும் வழிவகுக்க வேண்டும். வாழ்வியலோடு இரண்டறக் கலக்கவும் வேண்டும்.

தாயகமாக இந்தியாவிலேயே ஹிந்தி மொழியை பல மாநிலங்களைச் சேர்ந்த இந்திய பிரஜைகளே வெறுக்கின்றன நிலையில், யாழ்ப்பாணத்தில் ஹிந்தியை திணிப்பதற்கான காரணம் என்ன?

தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியாக குரல் கொடுக்கின்ற போதெல்லாம், வடக்கு, கிழக்கை, தமது மாநிலங்களில் ஒன்றாகவே மாற்ற முயற்சிக்கிறது என தென்னிலங்கையைச் சேர்ந்த இனவாதங்களைக் கக்குவோர் கொக்கரிப்பார்கள். அவர்களின் வாய்களுக்குத் தீணியை போடுவதாய், இந்த ஹிந்தி மொழியை கற்பித்தலும் அமைந்துவிடும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களில் பலருக்கும் ஹிந்தி தெரியும். அவர்கள் தொழில் முறைக்காக அல்ல, திரைப்படங்களை பார்வையிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக கற்றுக்கொண்டனர்.

ஹிந்தி மொழி, பாடசாலைகளில் கற்பிக்கப்படுவது தொடர்பில், சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும், அரசியல்வாதிகளும், சமூகத்தின்பால் அக்கறைக் கொண்டவர்களும் இந்த ஹிந்திமொழி திணிப்பு தொடர்பில் காக்கும் மாயன அமைதியை களைந்து, சந்தேகங்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# தேசிய அரசாங்கமும் தமிழர் தரப்பும்

லக்ஸ்மன்

உட்கட்சி முரண்பாடுகளோடு கொள்கைப்பிடிப்போடும் கட்சிகளை நடத்திச் செல்வதென்பது மிகவும் சிக்கலான விடயமே. இதில் உட்கட்சி ஜனநாயகம் பெரும் குழப்பமாகவே இருந்து கொண்டிருக்கிறது.

நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமை காரணமாக ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தினை அமைத்து அதனை ஸ்திரப்படுத்திவிடவேண்டும் என்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை எடுத்திருந்தார். ஆனால் அது இதுவரை கைகூடவில்லை. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அதனால் அம் முயற்சியைக் கைவிட்டு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான முயற்சிகள் ஆரம்பமாகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையுடன் இருக்கின்ற தற்போதைய பாராளுமன்றத்தில் சர்வ கட்சிக்கோ, தேசிய அரசாங்கத்திற்கோ தமது பெரும்பான்மை ஆதிக்கத்தை அக் கட்சி விட்டுக்கொடுக்காது. இவ்வாறான நிலைமையின் காரணமாகத்தான் சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பதிலும் இழுபறி இதுவரையில் இருந்து கொண்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். இந்த நிலையில் தேசிய அரசாங்கம் என்பது எவ்வாறு சாத்தியப்படும். கைகூடும் என்பதுதான் இந்த இடத்தில் விவாதத்துக்குரியது.

இலங்கை பாராளுமன்றத்தில் சிறுபான்மைக்கட்சிகள், பெரும்பான்மைக் கட்சிகள் என அரசியல் கட்சிகள் பலவற்றின் அங்கத்தவர்கள் இணைந்திருக்கிறார்கள். ஆனால், யாரும் நாட்டு மக்களின் நலன் குறித்தோ நாட்டின் எதிர்காலம் பற்றியோ மனச்சாட்சியுடன் சிந்திப்பதாக இல்லை என்ற குற்றச்சாட்டு காணப்பட்டாலும், அரசியல் என்று வந்துவிட்டால் அதனைப்பற்றி ஏன் யோசிக்க வேண்டும் என்பதே நிலைப்பாடாக இருக்கிறது. யாரை யார் வீழ்த்தலாம் என்று சிந்திக்கின்ற அரசியலே நடைபெறுகிறது. இதில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு யார் பிள்ளையார் சுழி போடுவது என்பதும் ஒரு வகையான கேள்வியே.

அது ஒருபக்கமிருக்க, நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் இருந்து வருகின்ற சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் இதுவரையில் தீர்வுக்குட்படுத்தப்படவில்லை. அதற்காக நடைபெற்ற அகிம்சை முதல் ஆயுதம் வரையான போராட்டங்கள் பெற்றுக் கொடுத்தவைகள் யாவும் பெரும் இழப்புக்களும், துன்பங்களும், துயரங்களுமே. ஆனால் அதனை பெரும்பான்மைத் தரப்பு இன்னமும் புரிந்து கொள்ளாமலிருப்பதற்கான காரணத்தினை இதுவரை யாரும் சரியாக வெளிப்படுத்தி வரையறுக்கவில்லை. அது தொடர்பில் தமிழர் அரசியல் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எல்லோரும் ஓடிச் சென்று வலிந்து முட்டுக் கொடுத்து கண் திறந்தே பள்ளத்தில் விழுந்ததாகவே சொல்லிக் கொள்ளலாம்.

இனப் பிரச்சினையானது வடக்கு கிழக்கு மக்களுக்கு மாத்திரமல்ல முழுநாட்டுக்குமே இன்னல்களைக் கொடுத்தது. இருந்தாலும் தமிழர்களின் வலியை பெரும்பான்மையினர் உணர மறுப்பதே கவலைக்குரியது. வடக்கு கிழக்கு துண்டாடப்படுவதும், காணிகள் கபளீகரம் செய்யப்படுவதும் காலங்காலமாக நடைபெற்று வருகின்ற ஒன்று.

ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை அரசாங்கங்களும், அரச தலைவர்களும் சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக தங்களுக்கு வேண்டிய தமிழ் இனப்பரம்பலைக் குறைக்கின்ற செயற்பாட்டையே முன்னெடுத்திருந்தனர். அதே நேரத்தில் தாங்கள் கொடுக்க நினைப்பது எதுவென்றாலும் அதனை தமிழர்கள் ஏற்கவேண்டும் என்ற மனோநிலையையே கொண்டுமிருக்கின்றனர்.

1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பொழுது அந்தச் சுதந்திரம் எண்ணிக்கையில் பெரும்பான்மைத்துவ சிங்களவர்களுக்கே உரித்தாகிவிட்டது என்பதுதான் உண்மை. அதனால்தான் தமிழர்களின் போராட்டம் ஆரம்பமானது. அதனை சிங்களவர்கள் கணக்கிலும் எடுக்காமைபோன்று இத்தனை காலத்திலும் அதற்கான தீர்வை வழங்காமலிருப்பதற்கும் காரணமாகும். இவற்றில் மாற்றம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், ஒற்றையாட்சிச் சட்டத்துக்குள் இருக்கின்ற இலங்கை அதற்குள் இருந்து முதலில் வெளியே வருவது சிறப்பானதாக அமையும். அதன் மூலமே இனமுரண்பாட்டுச் சிக்கலுக்கான தீர்வைச் சாத்தியப்படுத்தும் முதல் அடியை எடுத்து வைக்க முடியும்.

தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக புதியதாக வருகின்ற ஜனாதிபதியோ, பிரதமரோ ஒற்றை வார்த்தையில் கவலையடைகிறோம் என்று தெரிவிப்பதும், அரசியல் தீர்வு கொடுக்கிறோம் என்பதும், பயங்கரவாதச் சட்டத்தினை திருத்துகிறோம், நீக்குகிறோம் என்று சொல்வதும் தமிழர்களை அமைதிப்படுத்துவதற்கானதல்ல என்பது தமிழர்களுக்கும் தெரிந்ததே. இருந்தாலும், வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கையுடன் இருக்கின்ற தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கு முன்வருகைகள் போதாமலிருப்பது கவலைக்குரியது.

நடந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் உரிமைக்கான பிரச்சினையில் பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், சந்திரிகா கொண்டுவந்த தீர்வுப் பொதி, இடைக்கால நிருவாக சபை எனப் பல முயற்சிகள் பயனற்றே போயின. ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டதும் தீர்வுப் பொதிகள் எரிக்கப்படுவதும் நடைபெற்றன. அதனை தேசியக் கட்சிகளே செய்திருக்கின்றன. இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இடதுசாரிக் கொள்கையுடையவர்களாகக் காட்டிக் கொண்டிருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி என்கிற ஜே.வி. பி கூட தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வைக் கொடுப்பதில் பூரண அக்கறையைக் காட்டியிருக்கவில்லை. அத்தோடு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வட கிழக்கை பிரித்து அதனைத் தனித்தனியாக்கியது மாத்திரமல்லாது, தொடர்ச்சியாகவும் தமிழர்களுக்கெதிரான வேலைத்திட்டங்களே மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருக்கின்றன.


வடக்கு கிழக்கில் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச 13 பிளஸ், பிளஸ் தருவேன் என்று கூறிவிட்டு கை உதறிவிட்டார். அதற்குப் பின்னர் ஜனாதிபதியாக வந்த மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்துடன் முரண்பட்டு புதிதாக அமைக்கப்படவிருந்த அரசியலமைப்பு முயற்சியை இடைநடுவில் செல்லாக் காசாக்கினார். அதற்கான காரணங்களை யாரும் இன்னமும் விளக்கவில்லை. இலங்கைக்கே உரித்தான விடயமாக இருக்கின்ற அரசியலமைப்புத் திருத்தம் என்பது முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. இப்போது 22ஆவது திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது. இந்தத்திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக 9 மனுக்கள் நேற்றுவரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிக்கின்றன. 22ஆவது திருத்தம் வரையில் இவற்றுக்கான விடைகள் கிடைக்கப் போவதில்லை.

இது ஒரு புறமிருக்க, புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கென குழுக்கள் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைக்கப்பட்டு இறுதியில் காணாமல் போய்விடுகிறது. இவ்வாறான நிலைமை தொடர்வதானது இலங்கையின் அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் சிறப்பானதல்ல. அப்படியானால் உடனடியாகச் செய்து முடிக்கவேண்டிய வேலைகளில் ஒன்று புதிய அரசியலமைப்பு உருவாக்கமே. நல்லாட்சி அரசாங்க காலத்தில் அரசயிலமைப்பு முயற்சி முயற்சி பயனற்றுப் போனது. புதிய அரசியலமைப்பு மாற்றம், தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதனைக் குறியாகக் கொண்டிருக்கவேண்டும் என்பது இதில் முக்கியப்படுத்தப்படவும் வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முயலாமல் இடைநடுவில் அல்லது சிறிது காலத்தில் ஏற்பட்ட பிரச்சினையை சமாளிக்க முயலும் முயற்சிகளால் பயனேதுமில்லை. அவ்வாறானதில் ஒன்றே புலம்பெயர் தமிழர் அமைப்புகள், புலம் பெயர்ந்தவர்களின் தடைகள் நீக்கமாகும்.

கடந்த கால யுத்தத்தின் போதும், அதற்குப் பின்னரும் யாருக்கும் தெரியாமல் கைது செய்யப்பட்டவர்கள், கண் கண்ட சாட்சிகளுடன் கைதானவர்கள், கையளிக்கப்பட்டவர்கள் என்கின்ற தொகை இதுவரையில் காணாமல் போனோர் என்ற வரையறைக்குள்ளேயே இருக்கின்றனர். ஆனால், உண்மையில் காணாமல் போனோர் என்பதே தவறான பதப் பிரயோகம். ஒருவர் எப்படி காணாமல் போக முடியும். காணாமல் போனதாகக் கருதப்படும் அனைவரும் தமது உறவு, சொந்தங்கள் மூலம் அல்லது அவர்களது கண் முன்னால் யாராலோ அழைத்து கொண்டு செல்லப்பட்டவர்களே. யாராலோ காணாமல் ஆக்கப்பட்டவர்களே. என்கின்ற விடயம் மிக முக்கியமானது. பொருளாதாரப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கான முயற்சிக்காகவே தேசிய அரசாங்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இருந்தாலும் அந்த அரசாங்கத்தின் முதல் வேலைகளில் ஒன்றாக இதுவும் இருக்கத்தான் வேண்டும்.

எது எவ்வாறானாலும், பெரும்பான்மை சமூகத்தையும், பௌத்த தேசியவாதத்தையும், அதன் மேலாண்மையையும் இலக்காகக் கொண்டதாக இருக்கின்ற இலங்கையின் ஆட்சிமுறையில் மாற்றம் ஏற்படுகின்ற தேசிய இணக்கப்பாடு சாத்தியமெனில் அதுவே தேசிய அரசாங்கத்திற்குப் பயனைப் பெற்றுத் தருவதாக இருக்க முடியும். தமிழர்கள் நலன் சார்ந்து நோக்குகையில், தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் இந்த மனோநிலையில் மாற்றமில்லையெனில் பயனேதுமில்லை. அந்தவகையில் வலிமையான ஜனநாயக கட்டமைப்பை உருவாக்கி இன ஐக்கியத்தை ஏற்படுத்த உளப்பூர்வமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயலாற்ற வேண்டும். அது தேசிய அரசாங்க முயற்;சி மூலம் நடைபெறும் என்று நம்புவோம்.

ஆனாலும், பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றிவாதமும், இராணுவ மேட்டிமைத்தனமும் கோலோச்சியிருக்கின்ற நிலைமையில் இது சாத்தியமா என்று சீர்தூக்கிப் பார்க்கலாமே தவிர வேறு எதனையும் செய்துவிட முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

நல்ல விடயத்தை எண்ணும்போது, நல்ல சிந்தனை உருவாகலாம். அதை உறுதியாக மனதில் நிறுத்துக! பலர் சொல்வார்கள், "நான் பலவிடயங்களைச் சிந்திப்பேன்; பின்னர், செய்யவேண்டியதை மறந்து விடுவேன்". தொடர்ந்து செய்யாத பணிகள் மறக்கப்படும். உணர்க!

ஒவ்வொரு வேலையிலும் நுட்பங்கள் உண்டு. எந்த வேலையையும் பழகாமல் செய்வது சிரமமானது. கருமங்களில் தேர்ச்சி பெற்றவர்கள், ஒரு மணித்தியாலத்தில் முடிக்கும் நேரத்தில், தொழில் தெரியாதவர்கள் முழுநாளும் செய்துமுடிக்காமல் திணறுவவார்கள்.

இன்று, படித்த இளைஞர்களில் அநேகர், தமக்குப் பிடித்த வேலையைச் செய்து, தனவந்தர் ஆகிவிடுகின்றனர். எவ்வளவு தான் கல்வி பெற்றாலும், அதனூடாக அனுபவக் கல்வியைப் பிரயோகித்தால், அவர்கள் திறமைசாலிகளாகி விடுகின்றனர். மேலும், பலருக்கு தொழில் வாய்ப்பையும் வழங்குகின்றனர். உழைக்க விருப்பப்பட வேண்டும். எண்ணங்கள் வலுப்பெற்றால், காரியம் ஜெயம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதி வேலை தொடங்கப்படவில்லை

முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள் குளத்தில் இருந்து அக்கராயன் நோக்கி வீதி அமைத்தல் வேலைத் திட்டம் நீண்ட காலமாக முடிக்கப்படாமல் உள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மூன்று கிலோ மீற்றர் வீதி நிரந்தரமாக அமைக்கப்படும் என விளம்பரப் பலகைகள் கிராமத்தில் நாட்டப்பட்டுள்ள போதிலும் அதற்குரிய வேலைகள் இடம் பெறாத நிலையில் காணப்படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வீதி வேலைகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் தற்போது 110 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் முதன்மை வீதி தற்காலிக வீதியாகவே தற்போது வரை காணப்படுகின்றது. விவசாயத்தினை நம்பி உள்ள இக்கிராமத்தில் அறுவடை காலங்களில் நெல்லினை வெளியிடங்களுக்குக் கொண்டு வருவதில் இக்கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொள்வார்கள்.

இந்நிலையில் இக்கிராமத்தில் நிரந்தரமாக மூன்று கிலோ மீற்றர் வீதி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டும் வேலைகள் நிறைவு பெறாமல் உள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்



# ‘ஏசுவார்கள், எரிப்பார்கள், உண்மையை எழுது’



க. விஜயரெத்தினம்

ஜனநாயகம் மிக்க நாட்டில் நான்காவது தூணாக ஊடகத்துறையும் ஊடகவியலாளர்களுமே கருதப்படுகின்றார்கள்.

‘ஏசுவார்கள்…
எரிப்பார்கள்...
உண்மையை எழுது…
உண்மையாக எழுது…”

என, யோகர் சுவாமிகள் ஊடவியலாளரை பார்த்து கூறினார். ஆனால், போர் முடிவடைந்த காலத்தில்,

‘சுடுவார்கள்...
கடத்துவார்கள்…
கொலை செய்வார்கள்....
உண்மையை எழுது…
உண்மையாக எழுது’

என்னும் காலத்தில்தான் ஊடகவியலாளர்கள் ஊடகத்துறை ஆற்றி வருகின்றார்கள்.

இவ்வாறான ஊடகப்பணியை மேற்கொள்வது எல்லோராலும் முடியாத விடயமாகும். பல சிரமங்களுக்கு மத்தியில், உயிரை துச்சமென நினைத்துதான் ஊடகதருமத்துடன், நடுநிலையாக ஊடகவியலாளர்கள் ஊடகத்துறைக்கு சேவையாற்றுகின்றார்கள்.

நாட்டுக்கு நாடு ஊடகத்துறையானது வேறுபாடுடையது. இந்நிலையில் இலங்கையில் இராணுவக் கெடுபிடிகள், அரசியல் கொள்கைகள், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், துப்பாக்கிகளுக்கு மத்தியில்தான் ஊடகவியலாளர்கள் சேவையாற்றுகின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதார கஸ்டம், குடும்பத்தின் வறுமைக்கு மத்தியிலும் காத்திரமான ஊடகப்பணி ஆற்றிவரும் மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 30 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதம் ஊக்குவிப்புத் தொகை வழங்கி வைக்கப்பட்டது.

ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விசேட வேலைத்திட்டத்தின் பிரகாரம், கல்குடா மீடியா போரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்மைத்துவம் மற்றும் நல்லிணக்கத்தையும் ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிக்க, இக்கட்டான சூழலில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டு, மக்களின் செய்திகளை சமூகப் பொறுப்போடு, சம்பந்தப்பட்டவர்களுக்கு கொண்டு செல்லும் பல்வேறு ஊடகங்களில் பிராந்திய செய்தியாளர்களாக களப் பணியாற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பலரும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நிலைமையை கருத்தில் கொண்டு, நாடளாவிய ரீதியில் இன, மத, மொழி, சாதி வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான ‘சமூகஜோதி’ வாமதேவன் தியாகேந்திரனிடம் மட்டக்களப்பு கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம் பாரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, மாவட்டத்தில் ஊடகவியலாளர்களாக களப்பணியாற்றும் தெரிவு செய்யப்பட்ட 30 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதம் ஊக்குவிப்புத் தொகை, மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் பிரசன்னத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

இப்படியான கைங்கரியமானது ஊடகப்பணி ஆற்றிவருவோருக்கு சிறப்புமிக்கதாகும். இது வரவேற்கத்தக்கதாகும். சமூகஜோதி வாமதேவன் தியாகேந்திரனின் சிந்தனையில் உதிர்த்த நல்லெண்ணத்தினால் ஊடகவியலாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள், பல நன்மைகளை அடைந்திருப்பதால் எல்லாப்புகழும், இறைவனின் ஆசீயும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.















ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கல்குடா மீடியா போரம், மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்மைத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைவாக இந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்கும் நிகழ்வு, கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் ஏறாவூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (08) மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் கலந்துகொண்டார்.

ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜுத், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளரும்,தியாகி அறக்கொடை நிதியத்தின் கிழக்கு மாகாண,இணைப்பாளர் எம்.எல். எம்.என். நைறுஸ்,ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம். நளீம்,உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம் பாரிஸ் மாவட்ட ஊடகவியலாளர்கள் சார்பாக மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் உரையாற்றுகையில்...

‘மட்டக்களப்பு மாவட்டம் பல்லின சமூகம் வாழுகின்ற மாவட்டமாகும்.இங்கு ஊடகவியலாளர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றுகின்றார்கள். இனம்,மதம்,மொழி கடந்து ஊடகவியலாளர்கள் வேலை செய்கின்றார்கள். ஊடகவியலாளர்கள் பொதுவாக எமது நாடு இருக்கின்ற பொருளாதாரப் பிரச்சனை,பல இன்னல்களுக்கும்,எரிபொருள் பிரச்சனை மத்தியிலும்,பல அவதானிப்புக்கள் மத்தியிலும் காத்திரமான ஊடகப்பணியை செய்து வருவதால் எப்போதும் மட்டக்களப்பு மாவட்டம் அபிவிருத்தியை காணத்துடிக்கும் மாவட்டமாகும்.இவ்வாறான கஸ்டங்களுக்கு மத்தியில் கல்குடா மீடியா போராம் மாவட்டத்தில் ஊடகப்பணியாற்றி வருவோரை ஒருங்கிணைத்து அதற்கான நிதியை “சமூகஜோதி” வாமதேவன் தியாகேந்திரனின் நிதிப்பங்களிப்புடன் ஊடகவியலாளர்களுக்கு முதற்கட்டமாக பத்தாயிரம் ரூபா கொடுத்து இப்பணியை ஆரம்பித்து பிள்ளையார்சுழி போட்டு ஆரம்பித்தமை நான் பாராட்டுகின்றேன்.

ஒரு செய்தியை சொல்வதுதான் செய்தியாக இருந்ததுதான் காலமாக இருந்தது.அது மருவிப்போய் ஒரு செய்தியை இப்படிச் சொன்னால் அது வாசிப்போரை கவர்ந்திழுத்து வாசிப்போரை தூண்டி இழுக்கும் காலத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். ஊடகங்களின் வளர்ச்சி,தொழிநுட்பங்களின் வளர்ச்சி,இலக்கியங்களின் வளர்ச்சிப்போக்கு என்பனவற்றின் காரணமாக ஊடகத்துறையை புரிந்துகொண்டு எழுதுபவர்கள் சிறப்பாக மக்களுக்கு செய்தியை கோர்ப்புச் செய்கின்றார்கள்.

மட்டக்களப்பில் காலையில் நடைப்பயிற்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வைத்திய நிபுணர்கள்,வைத்தியர் கள்,பொறியியலாளர்கள் மற்றும் இன்னும் பல மனிதநேயமிக்க,சூழ ல்நேயமிக்கவர்கள் ஒன்றிணைந்து வீதியை துப்பரவு செய்கின்றார்கள். இது அவர்களின் சிந்தனையில் வந்த மாற்றமாகும்.சிந்தனை மாற்றத்தினால் சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டு ஒரு தனிமனித சமூகம் மாற்றம் காணும்.இதைத்தான் ஊடகவியலாளர்கள் செய்தியாக்கி வெளிக்கொணர வேண்டும்.

ஊடகப்பணியில் இறங்கி வேலை செய்பவர்கள் மக்கள் நலன்சார்ந்து,மக்களின் இன்னல்கள்,தேவைகள்,மக்களின் அடிப்படை பிரச்சனைகளை பொதுவாக இன,மதம்,மொழி கடந்து துடிப்போடு தருமத்துடன் சேவையாற்ற வேண்டும்.பன்மைத்துவம்,இன நல்லிணக்கம்,ஐக்கியத்துடன் மக்களின் ஜனநாயககுரலாக ஒழித்து,தான் இருக்கின்ற மா வட்டத்திற்கும்,சமூகத்திற்கும், நாட்டுக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினால் மக்களினால் நேசிக்கப்பட்டு மனிதபிமானியாக ஊடகவியலாளர் திகழ்வார் என்பதுதான் திண்ணமாகும்.

இன்றைய பொருளாதார கஸ்டம்,பல துன்பங்களுக்கு மத்தியில் ஊடகவியலாளர்கள் களத்திற்கு சென்று செய்தியை கோர்ப்புச் செய்து வெளிக்கொணர்ந்தாலும் அவர்களது மனைவிமார்,பி ள்ளைகள்,காண்பவர்கள் “பெரியதொகை பணத்துக்காக உழைக்கின்றார்கள்” என எதிர்பார்த்தாலும் ஊடகவியலாளர்கள் “சிறிய தொகைக்குதான் உழைக்கின்றார்கள்” என்பது உண்மையாகும்.தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் இன நல் லிணத்துக்கும்,ஐக்கியத்து க்கும் உழைக்க வேண்டும். வருங்காலத்தில் ஒரு நாடு,ஒரு மாவட்டம்,ஒரு சமூகத்திற்கு அடுத்த செய்தியை சொல்பவர்கள் இந்த ஊடகவியலாளார்கள்தான். ஊடகவியலாளர்கள் ஒருவரின் மனதை புரிந்துகொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக,மனதை நெகிழ வைக்காமல்,மனதை உறுத்தி செய்தி எழுதாமல் ஒரு மனிதனின் சிந்தனை மாற்றத்தை உருவாக்கி எழுத வேண்டும்.மூத்த பத்திரிகையாளர் எஸ்.ரீ.சிவநாதன் போன்ற பத்திரிகையாளர் பத்திரிகைத்துறையில் விருது பெற்றாற்போல உங்களின் எழுத்துப்பணி சிறந்து விளங்குவதோடு ஊடகவியலாளர்களுக்கு இன்று வழங்கிய சிறியாதொகையானாலும் அது அவர்களுக்கு உயிரோட்டமுள்ள சேவையாகும் எனத்தெரிவித்தார்.

---

சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பள விடயம் தொடர்ந்திருந்தால்

# நியாயமான சம்பள உயர்வு கிடைத்திருக்கும்

## விவசாய தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர். கிருஸ்ணசாமி

எம். செல்வராஜா

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பள உயர்வு விடயம் தொடர்ந்திருக்குமேயானால் இன்றைய நிலையில் வாழ்கைச்செலவு உயர்விற்கமைய நியாயமான சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கும். தோட்டத்தொழிலாளர்கள் சம்பள உயர்விற்காக போராட்டங்களை நடத்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது. ஓரிரு தோட்ட தொழிற்சங்கங்களின் தொலைநோக்கற்ற செயற்பாடுகளினாலேயே, தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனரென்று, விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்.

சம்பள நிர்ணய சபையின் ஆரம்ப கால உறுப்பினரென்ற ரீதியிலும், சிரேஸ்ட தொழிற்சங்க வாதியுமான, விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஷ்ணசாமியை 15-08-2022ல் சந்தித்து, நேர்காணலொன்றினை மேற்கொண்டேன். அந் நேர் காணலின் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

**கேள்வி: சம்பள நிர்ணய சபையின் ஆரம்பகால உறுப்பினராக தொடர்ந்தும் இருந்து வரும் தாங்கள், சம்பள நிர்ணய சபையின் கட்டமைப்பு குறித்து கூறுங்கள்?**

பதில்: தொழில் திணைக்கள மண்டபத்தில், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயங்கள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுப்பதற்கு, அவசியம் இருக்கும் போதெல்லாம் சபை கூடும். சம்பள நிர்ணய சபையின் தலைவர் தலைமையில், சபை செயலாளர் மற்றும் தொழில் ஆணையாளர் உள்ளிட்டு நியமன உறுப்பினர்கள் மூவர், தொழில் தருணர் 8 பேர், தொழிலாளர் பிரதிநிதிகள் 8 பேர் என்ற வகையில் 22 பேருடன் சபை கூட்டப்படும்.

கடந்த வருடம் 2021-02-08ந் திகதி தொழில் திணைக்கள 4ம் மாடியில் இவ் வகையில் கூடி, தோட்டத் தொழிலாளர்களுக்கு தினமொன்றிற்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை தீரமானித்தோம். இக் கலந்துரையாடலில் இ.தொ.கா. சார்பில் கே. மாரிமுத்து, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க சார்பில் எஸ். முத்துக்குமார், பொதுஜன முன்னனி தொழிற்சங்க சார்பில் சிரிமான ஹெட்டிகே சாந்த, விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆர்.எம். கிருஷ்ணசாமி ஆகிய நான், பெருந்தோட்ட தொழிற்சங்க சார்பில் கிரிந்தகமகே பியதாச, ஸ்ரீலங்கா தொழிற்சங்க சார்பில் பி.ஜீ. சந்திரசேன, தோட்ட உத்தியோகத்தர் சங்க சார்பில் ரொபட் பிரான்சிஸ், ஜே.வி.பி. தொழிற்சங்க சார்பில் கிட்ணன் செல்வராஜ் ஆகிய எட்டுப் பேரும் கலந்து கொண்டிருந்தோம். இந்த எட்டுப் பேருமே, தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா தினச்சம்பள உயர்விற்கு ஆதரவாக வாக்களித்தவர்களாவர். தொழில் தருணர் சார்பில் இருந்த எட்டுப் பேரும், எதிராக வாக்களித்தனர். நியமன உறுப்பினர்கள் மூவரும் ஆதரவாக வாக்களித்ததினால் சம்பள உயர்வு தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக் கட்டமைப்பு அடிப்படையிலும், அரசின் பூரண அனுசரணையுடனும் சம்பள நிர்ணய சபை இயங்குகின்றது. சில தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தக் கட்டமைப்பில் இணைந்ததினால், சம்பள நிர்ணய சபை அவசியமற்றதாகக் கருதப்பட்டது. கூட்டு ஒப்பந்தத்தில் சலனம் ஏற்பட்டதினால், மீளவும் சம்பள நிர்ணய சபையின் அவசியம் ஏற்பட்டது. தொடர்ந்தும் சம்பள நிர்ணய சபையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருப்பின், தோட்டத் தொழிலாளர்களில் வாழ்வியல்களில் பாரிய முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்.



தொழிலாளர்களின் வாழ்வும் வளம் பெற்றிருக்கும்.

**கேள்வி : கூட்டு ஒப்பந்தம் முறைமையை, தாங்கள் எதிர்க்கின்றீர்களா?**

பதில்: கூட்டு ஒப்பந்தமொன்று அவசியம் இருக்க வேண்டும். தொழில் துறையொன்றிற்கு கூட்டு ஒப்பந்தம் அவசியமாகும். ஆனால், அதன் செயற்பாடுகள் திருப்தியைத் தரவில்லை. இருந்த ஒப்பந்தம் முறையாகவும், கிரமமாகவும் முன்னெடுக்கப்படுவதில்லை. அவ் ஒப்பந்தத்தில் முதலாளிமார் சம்மேளனத்தின் செல்வாக்குகளே ஓங்கியிருக்கின்றன. ஆகையினால் அவ் ஒப்பந்தத்திற்கு பதிலாக சம்பள நிர்ணய சபைக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கி, தொழிலாளர்களின் வாழ்வியல்கள், சேமநலன்கள், மாதம் 25 தினங்கள் கட்டாய வேலை உள்ளிட்ட விடயங்கள் குறித்த சரத்துக்கள் இணைக்கப்பட்டு, சம்பள நிர்ணய சபை செயற்படல் வேண்டுமென்பதே, எனது கருத்தாகும். கூட்டு ஒப்பந்தத்தினால் பல்வேறு பாதிப்புக்களை தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ளனரென்ற கசப்பான நிலையையும், இங்கு கூறித்தான் ஆக வேண்டும். பல்வேறு வகைகளிலும் தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தங்களினால் ஏமாற்றப்பட்டனரென்பதே உண்மை.

**கேள்வி : பெருந்தோட்டத் துறை மக்களை எவ்வாறு வழி நடாத்த வேண்டுமென்று கருதுகின்றீர்கள்?**

பதில்: கடந்த 5 தசாப்தங்களாக, பெருந்தோட்ட மக்களின் வீட்டுரிமை, காணியுரிமை, வாழ்வியல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்த போதும், பயன் கிடைக்கவில்லை. மலையக தொழிற்சங்கங்கள் பேரினவாத பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து யானை, கை, வெற்றிலை ஆகிய சின்னங்களுடன் சங்கமித்து, தமது அடையாளங்களை இழந்து வருகின்றன. இதனால் வர்க்க உணர்வு ரீதியிலான செயற்பாடுகள் இல்லாது போயுள்ளன. எனவே, எமது உணர்வுகளையும், இலட்சியங்களையும் வென்றெடுக்கக் கூடிய புத்திஜீவிகள், சமூக முக்கியஸ்தர்கள், தொழிற்சங்கத்தினர் ஆகியோரை ஒன்றிணைந்து, எமது சமூகத்தின் தேவைகளை நிறைவேற்ற இதய சுத்தியான கூட்டமைப்பு ஒன்று உருவாக வேண்டும். அக் கூட்டமைப்பை பலப்படுத்துவதன் மூலம், எமது சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளல் வேண்டும். ஆகையினால், தொழிற்சங்கங்கள் அனைத்தும் கூட்டிணைந்து பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும்.

**கேள்வி : மலையக மக்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமைகள் குறித்து கூறுங்கள்?**

பதில்: மலையக மக்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமைகளை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகள் கடந்த 1986ல் ஆரம்பமானது. முன்னால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைத்த அனைவருக்கும் காணி, வீட்டுரிமை தீர்மானம் மூலம் மலையக மக்களும் காணி, வீட்டுரிமைகளைப் பெற்றனர். கம் உதாவ, பெருந்தோட்ட மக்களுக்கான தனி வீடுகள், மாதிரிக் கிராமத் திட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டன. சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியானதும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை உருவாக்கி, அமைச்சர் பெ. சந்திரசேகரன் மூலம் மாதிரிக் கிராமங்களை உருவாக்கினார். அதுவும் வெற்றியளிக்கவில்லை. பின்னர் மாடி வீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதுவும் விமர்சனத்திற்குள்ளானது. மறைந்த இராஜாங்க அமைச்சர் க. வேலாயுதம் பசுமை பூமித் திட்டத்தை உருவாக்கினார். முன்னால் அமைச்சர் பழநி திகாம்பரம் தனி வீட்டுத் திட்டத்தை 7 பேர்ச் காணியில் முன்னெடுத்தார். எதுவும் வெற்றியளிக்கவில்லை. எது எப்படியிருப்பினும் மலையக வீடமைப்புத் திட்டம் தொடர்பாக தெளிவான திட்டமிருக்கவில்லை. சமூக நலனிற்கு முக்கியத்துவம் வழங்காமல், அரசியலுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன், முறையான திட்டம், கொள்கை எவருக்கும் இருக்கவில்லை. இதுவே தோல்விக்கு காரணமாகும்.

**கேள்வி : தோட்டத் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் குறித்து, தொழிலாளர்கள் மத்தியில் புரிதல் இருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?**

பதில்: இல்லையென்றே நினைக்கின்றேன். தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் குறித்து, தொழிலாளர்கள் தொலை நோக்குடன் சிந்திப்பதில்லை. தோட்டங்களிலுள்ள தொழிற்சங்கத் தலைவர்களது சலுகைகளுக்கும், வரப்பிரசாதங்களுக்குமான பிரச்சினைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. தலைவர்களுக்கு முகஸ்துதி பாடும் நிலை தோட்டங்களில் தோன்றியுள்ளதால் தொழிலாளர்கள் உரிமைகள் பின்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் பெருந்தோட்டக் கட்டமைப்பிலிருந்து வெளியில் வர வேண்டும். முகாமைத்துவத்தினர் மற்றும் தொழிற்சங்கங்களை அனைத்து விடயங்களுக்கும் நம்பியிருக்காமல், தாமே சுயமாக சிந்தித்துச் செயற்படல் வேண்டும். அதன் மூலமே, தொழிலாளர்களுக்கு புரிதலும், விமோசனமும் கிடைக்கும்.

**கேள்வி : மலையகத்தின் தொழிற்சங்கமொன்றின் தலைவராக இருந்து வரும் நீங்கள், தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாடுகளுக்கென சாதித்த விடயங்கள் ஏதும் உண்டா?**

பதில்: நிறையவே உண்டு. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காகவே நானும், எனது குடும்பமும் அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றோம். எமது தொழிற்சங்க யாப்பில் வறுமைக் கோட்டின் கீழுள்ள தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை இனம்கண்டு, அவர்கள் கல்வியைத் தொடர வசதிகள் செய்து கொடுத்தல், அனாதரவாக்கப்பட்ட வறிய நிலையிலுள்ள பிள்ளைகளை பராமரித்து, அவர்களுக்கு ஆன்மீகம், கல்வி, கலாசார விழுமிய மேம்பாடுகளை வழங்கல் போன்ற விடயங்களை மேற்கொள்வதென்று உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் 1968ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதே, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல்களை மேம்படுத்துதல் உள்ளிட்டு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளையும் அனைத்து துறைகளிலும் மேம்படுத்தி, சமூகத்தில் அதிசிறந்த பிரஜைகளாக மாற்றுதல் என்பன எமது யாப்பிலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படியே எமது செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன.

எமது நாட்டின் தேசிய சுதந்திர தினமான பெப்ரவரி 4ந் திகதி, நாட்டின் பெருந்தோட்டத் தொழிலாளர்களைத் தவிர்த்து, அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அவ் விடுமுறை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் கிடைக்கவில்லை என்றார்.





# விதைப் பந்துகள்






வ. சக்திவேல்
shagthivel@gmail.com

'மரங்களை நடுபவன் தன்னையும் நேசிக்கின்றான்; பிறரையும் நேசிக்கின்றான்' என்பது முதுமொழி. காடுகள் அழிக்கப்பட்டு வரும் இக்காலத்திலும், சிலர் மரங்களை நாட்டி வருகின்றமை மெச்சத்தக்கதாகும்.

அதற்குக் கட்டியங்கூறுவது போன்று, இறைபணியில் மாத்திரமின்றி சுற்றுச் சூழல் பணியையும் இந்து ஸ்வயம்சேவக சங்கமும் மட்டக்களப்பு மாவட்டம் சிவதொண்டர் திருக்கூடமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

அந்த வகையில், பாலர் பாடசாலை முதல் உயர்வகுப்பு மாணவர்கள் வரைக்கும், ஏனைய பொது அமைப்புகள், இளைஞர் - யுவதிகள் அனைவருக்கும் சுற்றுச்சூழல் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதோடு, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர்.

அண்மையில், மட்டக்களப்பிலுள்ள சுவாமி ஓம்காரனந்தா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் தொடர்பிலும், மரம் நடுத்தல் தொடர்பிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு இருந்ததோடு, அவர்களின் பாடத்திட்டத்திலும் உள்வாங்கப்பட்டு பயிற்றுவித்தும் வரப்படுகின்றது.

இதன் ஒரு கட்டமாக, குறித்த சிறார்கள் ஒன்றிணைந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட விதைகளை, களிமண்ணுடன் சேர்த்து 2,000 விதைப் பந்துகளைத் தயார் செய்தனர். அவ்வாறு தயார் செய்யப்பட்ட 2,000 விதைப்பந்துகளை அச்சிறார்கள், அண்மையில் உகந்தை, யால, குமண உள்ளிட்ட காட்டுப் பாதைகளூடாகச் கதிர்காமத்துக்குப் பாதையாத்திரை சென்ற இந்து ஸ்வயம்சேவக சங்கத்தினரிடம் ஒப்படைத்ததிருந்தனர்.

சிறார்களின் கைப்பட உருவாக்கப்பட்ட விதைப் பந்துகளைப் பெற்றுக் கொண்ட பாதயாத்திரிகர்கள், உகந்தை முதல் கதிர்காமம் வரையில் அமைந்துள்ள காட்டுப்பகுதியில் விதைத்ததுடன் விதைப் பந்துகளை நீர்நிலைகள் உள்ள இடங்களில் எறிந்தும் சென்றனர்.

ஆன்மீகத்துடன் இணைந்து பாலர்பாடசாலை, ஆசிரியர்கள், அதன் நிர்வாகத்தினரின் வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்ட இயற்கையைப் பேணும் செயற்பாடானது, மாவட்டத்தில் மிகவும் முன்மாதிரியான செயற்பாடாகும் என அனைவரும் பாராட்டி வருகின்றனர். சிறார்களின் பிஞ்சுக்கரங்களால் தாயாரிக்கப்பட்ட விதைப் பந்துகளிலிருந்து உருவாகும் விருட்சங்கள், நிட்சயமாக என்றோ ஒருநாள், மனித சமூகத்துக்கு உதவும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இலங்கையில் கைலாயத்தின் நேரே நிற்கும் கந்த பெருமானின் கதிர்காம தலத்துக்கு இவ்வருடமும் பக்தர்கள் வடக்கு, கிழக்கிலிருந்து பாதை யாத்திரை மேற்கொண்டனர். மிருகங்கள் வசிக்கும் அடர்ந்த காட்டுப் பகுதி மற்றும் ஆறுகள் முதலிய கடுமையான பாதைகளை ஐந்து நாள்கள் தொடர்ந்து கடந்து செல்லும் யாத்திரையில் சுமார் 50,000 பக்தர்கள் ஒரு குழுவாக பங்கேற்றனர்.

இப்பயணத்தில், காடுகளில் மற்றும் ஆறுகளில் யாத்திரிகர்கள் பயன்படுத்திய இடங்களில், இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் ஸ்வயம்சேவகர்கள் தூய்மைப் பணியிலும் ஈடுபட்டனர். பிளாஸ்ரிக் பொருட்கள், காகிதங்கள், பொலித்தீன் பைகள் போன்ற கழிவுகளை சரியான இடத்தில் சேர்த்து, தூய்மைப் பணியில் ஈடுபட்டனர். இப்பணியில், இந்து ஸ்வயம்சேவக சங்க உறுப்பினர்களுடன் ஏராளமான பாதயாத்திரை பக்தர்களும் இணைந்திருந்தனர்.

இயற்கை வனப்பகுதிகளில் தூய்மையைப் பேணும் ஸ்வயம்சேவகர்களின் முயற்சியை சூழலியலாளர்கள் பாராட்டுகின்றனர். இதன்போது பாதயாத்திரைக்காக வந்த ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரு பக்தர்களும் தூய்மைப் பணியில் இணைந்திருந்தனர்.

"இயற்கை நமக்கு அன்னை இயற்கையை வழிபடுவோம்; இயற்கையைப் பாதுகாப்போம் அமைப்பினூடாக சுற்றுச் சூழலைப் பேணி, சைவம் போற்றி, தமிழ் வளர்ப்போம் எனும் நோக்கில், இயற்கையைப் பேணி, மரங்களை நட்டு வருகின்றோம். அதற்காகவேண்டி, பாலர் பாடசாலை மட்டத்திலேயே சிறார்களை ஊக்கப்படுத்தி வருகின்றோம். இது எமக்கு வெற்றிளித்துள்ளது. அதுபோன்று, சைவசமய சிவ சின்னமான உருத்திராக்கம் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் கோவில்கள் தோறும் சென்று, இதுவரை 47 ஆலயங்களில் 9,100 உருத்திராக்க மாலைகளை நாங்களே நேரில் சென்று அணிவித்து, சைவசமய அடையாளங்களின் முக்கியத்துவத்தை மக்கள் மத்தியில் கூறி வெற்றி கண்டுள்ளோம். தற்சமயம், இன்னும் பல ஆலயங்களின் பக்தர்களுக்கு அணிவிப்பதற்கு உருத்திராக்க மாலைகள் தேவை. எம்மிடம் தற்சயம் உருத்திராக்கம் மற்றும் நூல்கள் பற்றாக்குறையாக உள்ளன. எமது சிவ பணியை முன்னோக்கி கொண்டு செல்ல, சிவ தொண்டர்கள் தயாராக உள்ளனர். எனவே, இந்தப் புனிதமான சிவ பணிக்கு, பங்களிப்பை மேற்கொண்டு சுற்றுச்சூழலைப்பேணி, சைவம் போற்றி தமிழ்வளர்க்கும் மகத்தான பணியில் இணைந்து கொள்ளுமாறு, பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்" என, மட்டக்களப்பு மாவட்டம் சிவதொண்டர் திருக்கூடம் வேண்டுகோளையும் விடுத்துள்ளது.

மரங்கள், காடுகள் என்பவற்றின் நன்மைகள் பற்றி, மனிதர்கள் நன்கு அறிந்திருந்தும், இன்னுமின்னும் ஆங்காங்கே காடழிப்புகளும் மரங்களை வெட்டுவதிலும் ஈடுபட்டு வருவதானது வேதனைக்குரிய விடயமாகும்.

மேற்படி சமயம் சார்ந்த அமைப்புகள் மரம் நடுகைக்கு முன்னுரிமை வழங்கி, சிறார்கள் மட்டத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி,ஈ அதனை நடைமுறைப்படுத்தி வருவதுபோன்று, அனைத்து பொதுஅமைப்புகளும் தனிநபர்களும், இவ்வாறான செயற்பாடுகளை முடுக்கிவிடும் பட்சத்தில், அவை அடுத்துவரும் சந்ததியினருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும்.




## முதியோர்கள் மூலமான இளையோரை கொண்ட

# ஒரு நல்லிணக்கப் பயணம்




ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com

முதியோர்களும் எம்மைப் போன்ற மனிதர்களே; இவர்களை பாதுகாப்பதும் பராமரிப்பதும் ஒவ்வொரு குடும்பங்களின் பாரிய பொறுப்பாகவுள்ளது. இருந்த போதிலும் வயது முதிர்ந்த பொழுதுகளில் அவர்களைக் கைவிட்டு, வீதிகளிலும் ஏனைய பராமரிப்பற்ற இடங்களிலும் தடுமாறுவதை அவதானிக்க முடிகிறது.

சிலர், முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படுகிறார்கள். இவ்வாறான முதியோர்களை பராமரிப்பது தொடர்பிலும் இலங்கையில் பல நடவடிக்கைகள் காணப்பட்டாலும் முழுமை பெறவில்லை. இதன் ஒரு கட்டமாக IDove, African union, German coopration, GIZ ஆகிய விழுது எனும் அரசசார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து, முதலாவது செயற்றிட்டமானது சர்வமத இளைஞர் யுவதிகளின் பங்கேற்புடன் திருகோணமலையில் உள்ள சென் ஜோசப் முதியோர் இல்லத்தில் முதியோர்களை மகிழ்வூட்டல் செயற்பாடும், சிரமதான நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இதனை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்ததுடன் இதில் குறித்த முதியோர் இல்லத்தின் கீழ் பராமரிப்பின் கீழ் உள்ள 35 முதியோர்கள், இல்ல பொறுப்பாளர்களான அருட்சகோதரிகள் ,விழுது நிறுவன இளையோர்கள், விழுதின் சிரேஷ்ட சமுதாய ஒருங்கிணைப்பாளர் அபிவர்னா வர்ண குலசிங்கம், உளவளத் துணையாளர் திருமதி கொன்சலின் மாவளன் ஆகியோர்கள் பங்கேற்றிருந்தனர்.


முதியோர் இல்ல புறச்சூழல் பகுதிகளை சிரமதானம் மேற்கொண்டதுடன் ஆரம்ப நிகழ்வான வரவேற்பு நடனம் இடம் பெற்றதுடன் வரவேற்புரையை திருகோணமலை விழுது இளையோர் மெல்ரோய் வழங்கியதுடன் விழுது அமைப்பு முன்னெடுத்து வரும் செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் இந் நிகழ்வினை மேற்கொள்ளும் GIZ செயற்றிட்டம் தொடர்பான அறிமுகத்தினை திருகோணமலை விழுது சமூக ஒருங்கிணைப்பாளர் அபிவர்னா வழங்கியதோடு முதியோரின் சமூக வகிபங்கின் அவசியம் மற்றும் மத நல்லிணக்கத்தில் முதியோர், இளைஞர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் அவசியம் பற்றியதை இளையோர் சார்பாக கேசிகன் தெளிவுபடுத்தினார்.

குறித்த நிகழ்வைத் தொடர்ந்து, விளையாட்டுகளின் மூலமாக தாம் தெரிவு செய்த இலக்கத்திற்கான விடயத்தினை நடித்தும் கதை மூலமாகவும் ஏதாவதொரு வெளிப்பாட்டின் மூலமாக பார்வையாளரவுள்ள இளையோர் மற்றும் ஏனைய முதியோர்களுக்கு வெளிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டதிற்கிணங்க தமது கலை உணர்வுடன் மதங்கள் சார்ந்து தாம் கொண்டுள்ள ஈடுபாட்டினை பகிரக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக முதியோராக மதம் சார்ந்து கொண்டுள்ள ஈடுபாடு பிற மதம் சார்ந்து கொண்டுள்ள மரியாதை இளையோருக்கு முதியவராக நீங்கள் மதம் சார்ந்த அறிவுரை பிற மொழி சார்ந்த ஒருவரிடம் உதவியை நாடும் போது அவற்றை எவ்வாறு அனுகுவீர்கள் போன்ற விடயங்களை தம்மால் இயன்ற வரை வெளிப்படுத்த முயற்சித்து காட்டினார்கள் என்பது இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டது.







சமூகத்தில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் வலுச்சேர்க்கும் இளையோர்களுக்கு வழி காட்டும் முதியோரில் அனுபவப் பகிர்வு மற்றும் ஆலோசனை போன்றவற்றை இந் நிகழ்வு மேலும் திறம்பட வலுப்படுத்தியிருந்தது.

குறிப்பாக ஒவ்வொரு நிகழ்வும் இளையோருக்கும் முதியோருக்குமான பிணைப்பினை வலுவூட்டியதுடன் நாமும் இத்தகையதொரு மத நல்லிணக்கத்தை பின்பற்றியே முதியோர் இல்லத்தில் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாக வாழ்வதாகவும் சமூகத்தினை கட்டியெழுப்பும் இளையோருக்கு இம் முதியோர் இல்லம் சிறந்த எடுத்துக்காட்டு என்பதையும் இளையோராக நீங்கள் ஒன்று சேர்ந்திருப்பது ஒட்டு மொத்த இளையோர்களுக்கும் வழி காட்டிகளாக அமைய வாழ்த்துவதாகவும் முதியோர்கள் தமது கருத்தாடல்களில் இதன் போது பதிவிட்டிருந்தனர்.

திருகோணமலை மாவட்டம் என்பது மூவின சமூகங்களை சேர்ந்த ஓர் இயற்கை வளம் கொண்டதாக இருந்த போதிலும் முதியோர்களுக்கான இல்லம் அவர்களை பராமரிப்பதற்காய் அமைந்துள்ளதுடன் இவ்வாறான நிகழ்வுகள், அவர்களை சந்தோசத்தில் ஆழ்த்தியுள்ளன. மனச் சோர்வுடன் சில வேளைகளில் உளதாக்கங்களுடன் இருந்த போதிலும், உளவளத் துணை ஊடான பல கலை நிகழ்வுகள் சிறிய ரக விளையாட்டுகள் அவர்களை உடல் - உள ரீதியாக உளச் சுகாதாரத்தை வெளிப்படுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கும்.

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் முதலாம் திகதி, முதியோர் தின நிகழ்வாக இருந்தாலும் அது தவிர முதியோர்களை இன நல்லிணக்க மதச் சார்பின்றி இவ்வாறான திட்டங்களை கொண்ட நிகழ்வுகள் ஊடாக வலுப்படுத்துவதன் ஊடாக முதியோர் இல்லங்களின் பராமரிப்பில் சக்தி மிக்க நம்பிக்கையை ஊட்ட முடியும்.

வயோதிபக் காலங்களில் முதியோர்களுக்காக முதியோர் செயலகம் அரச மட்டத்தில் 70 வயதைப் பூர்த்தி செய்த வருமானம் குறைந்தவர்களுக்கான மாத கொடுப்பனவு, அடையாள அட்டை ஊடான சேவை என பல சேவைகள் வழங்கப்பட்டும் வருகின்றது. அதுபோன்று அவர்களுக்கான கொள்கையும் சில வரையறுக்கப்பட்டு காணப்படுகிறது.

இது தவிர, அரச சார்பற்ற நிலையில் இவ்வாறான திட்டங்களை இளையோர்களின் பங்களிப்பில் அமல்படுத்துவது வரவேற்கத்தக்கது. இன்றைய இளையோர்கள் நாளைய தலைவர்களாக வரவிருக்கிறார்கள். இதற்கான ஒத்துழைப்பையும் முதியோர்களுக்காக நம் தாய் தந்தை போன்று அவர்களுக்காய் உதவ இத்திட்டம் ஊடாக பங்களிப்பை வழங்குவோம்.





# வாழும் போதே வாழ்த்துவோம்

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட இக்பால் சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 'வாழும் போதே வாழ்த்துவோம்' கௌரவிப்பு நிகழ்வு ஒன்பதாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்பால் சனசமூக நிலைய தலைவர் ஏ. எல் லியாப்தீன் தலைமையில், 'கிறிசலிஸ்' நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வாழைச்சேனை இக்பால் சனசமூக நிலைய நிர்வாக எல்லைக்குட்பட்ட கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், விளையாட்டு, கலைத்துறை செயற்பாட்டாளர்கள், சுகாதார, பாதுகாப்பு, சுயதொழில் துறைசார்ந்த மூத்த, இளம் ஆளுமைகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில், அதிதிகளாக வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், பிரதேச சபை உறுப்பினர் எம். பி. எம் தையூப், வாழைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எஸ். நவநீதன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எம் ஹாரூன், காவத்தமுனை மில்லத் வித்தியாலய அதிபர் எச். எம் இஸ்மாயில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என். சஹாப்தீன், பி. எம் இஸ்மாயில், கே. சுபைர், கே. பிரேம் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(தகவலும் படங்களும்: எச். எம். எம் பர்ஸான்)








# திருகோணமலையில் நான்கு நூல்கள் வெளியீடு

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நூலுருவாக்கல் திட்டத்தின் கீழ், நான்கு எழுத்தாளர்களின் நூல்கள், ஞாயிற்றுக்கிழமை (14) திருகோணமலை நகரசபை மண்டபத்தில், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சனால் வெளியிடப்பட்டன. நூலாசிரியர்களான கலாபூஷணம் பி கனகரத்தினம் (ஷெல்லிதாசன்) எழுதிய 'அம்மாவுக்கு பிடித்த கனி' என்ற சிறுவர்பாடல் நூலும் வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் எழுதிய 'கொட்டியாரப்பற்று வன்னிபங்கள்' என்ற வரலாற்றுக் கட்டுரைகள் அடங்கிய நூலும் 'கவிச்சுடர்' திருமதி சிவரமணி எழுதிய ' நவீன சீதை' என்ற சிறுகதை நூலும் ஜனாப் ஏ. எம் முகைதீன் (மூதூர் முகைடீன்) எழுதிய 'கடலோரப் பாதை' என்ற சிறுகதை நூலும் வெளியிட்டுவைக்கப்பட்டன. இந்நிகழ்வில், பிரதம விருந்தினரான கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலகத்தின் (திட்டமிடல்) பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப் எம். ஏ. முனாஸீர் கலந்துகொண்டிருந்ததுடன் திருகோணமலை மாவட்டத்தின் அரச உயர் அதிகாரிகள், இலக்கியவாதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(படங்களும் தகவலும்: அ. அச்சுதன்)




# வவுனியா சிட்டி கிட்ஸ் முன்பள்ளி







வவுனியா சிட்டி கிட்ஸ் முன்பள்ளியின் வருடாந்த மழலையர் சந்தை மற்றும் கண்காட்சி நிகழ்வு நேற்று 11.08.2022 (வியாழக்கிழமை) பள்ளியின் முதல்வர் திரு.நந்தசீலன் தலைமையில் இடம்பெற்றது. முன்பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சந்தை மற்றும் கண்காட்சி நிகழ்வில் திருமதி கார்த்திகா (முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர்– வவுனியா மாவட்டம்) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, நிகழ்வுகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் கழிவுப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் சாதனங்கள், உபகரணங்கள் ஆகியனவும் கண்காட்சி வளாகத்தை அலங்கரித்தமை குறிப்பிடத்தக்கது.








# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டல்




கிளிநொச்சி, முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மாணவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வும் புதன்கிழமை (17), பாடசாலை அதிபர் க. கருணானந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் முருகானந்தா வித்யாலயத்தின் பழைய மாணவனும் பிரான்ஸ் ஒன்றியத்தை சேர்ந்த கிருபானந்தன் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கான சின்னத்தை சூட்டி வைத்தார்.


(06. படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)











# திருக்குறள் விழா

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் திருக்குறள் விழா புதன்கிழமை (17), உதவி பிரதேச செயலாளர் ம. ஜெபமயூரன் தலைமையில் நடைபெற்றது. திருவள்ளுவர் சிலைக்கான மாலையை க. லிங்கேஷ்வரன் (மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் – முல்லைத்தீவு) அணிவித்திருந்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ந. ரஞ்சனா மங்கள விளக்கை ஏற்றிவைக்க, தொடர்ந்து கௌரவ விருந்தினர்களும் ஏனைய அதிதிகளும் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர் நிகழ்வில், ஆரணி நர்த்தனாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும் கரகாட்ட கலை நிகழ்வும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை 20 ஓகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.